Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, SEPTEMBER 26 2025

வியாழக்கிழமை செப்டெம்பர் 26,2024 | ஒளி: 10 கதிர் 059 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 5 நாட்களில் பெறுபேறு

இந்த வருட கல்விப் பொதுத் தராதரப் பொதுப் பரீட்சையின் பெறுபேறுகள் இன்னும் 5 நாட்களில் வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாமல் இருந்திருந்தால் இப்போதே முடிவுகளை வழங்க முடியும் எனவும், வாக்குப்பதிவு காரணமாக அதிகளவான உத்தியோகத்தர்கள் வாக்களிப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தமையினால் முடிவுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “மாற்றங்களை மேற்கொள்வோம்”



- எமது கதவுகள் திறந்துள்ளன
- செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவோம்
- வாழ்க்கைச் சுமையை குறைப்போம்
- கடன் தரப்பினர்களுடன் பேச்சு பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதி
- சர்வதேச ஆதரவை பெற முடியும்
- இலங்கை தேசமாக கட்டியெழுப்ப திட்டம் சமூக பாதுகாப்பை உறுதி செய்வோம்
- சட்டத்தின் முன் அனைவரும் சமம்

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக காத்திரமாகவும் நேர்மையாகவும் இணையும் அனைவருக்கும் எமது கதவுகள் திறந்துள்ளன. மக்களின் ஆணைக்கு அமைவான பாராளுமன்றம் ஒன்று அவசியப்படுகிறது. இறுதியாக இருந்த பாராளுமன்றம் மக்கள் ஆணையை திரிபுபடுத்தியதாக காணப்பட்டது. அதனால் பாராளுமன்றத்தை கலைக்க நடவடிக்கை எடுத்தேன் என்று ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க,புதன்கிழமை (25 இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,..

பல தசாப்தங்களாக நாம் எழுப்பிய குரலுக்கு மெது மெதுவாக ஆனால் சீராக செவிசாய்த்து, நாங்கள் முன்வைத்த வேலைத்திட்டத்திற்கு உயிர்மூச்சாக இருந்த இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் எங்களது கௌரவத்தைத் தெரிவிக்கிறோம். எங்கள் வேலைத்திட்டத்தில் உடன்படாத தரப்பினர் கூட நாங்கள் அடைந்த வெற்றியால் மகிழ்ச்சி அடைந்தால் மாத்திரமே நீங்கள் அளித்த இந்த வெற்றி மேலும் பலமானதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, இந்த வெற்றியின் உரிமையை நம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். நமது அரசியல் இயக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, பல்வேறு அவதூறுகளையும், பொய்யான, திரிபுபடுத்தப்பட்ட தகவல்களையும் ஒதுக்கி விட்டு, புதிய பரிசோதனைக்கு அஞ்சாமல், எமது அரசியல் இயக்கத்திற்கு நமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை வழங்கும் அளவிற்கு பெரும் உறுதியுடன் இருந்த பிரஜைகள் உட்பட அனைத்து மக்களுக்கும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்கு தோள் கொடுப்பதற்கான பலம் இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

தொடர்ச்சி P7

பாராளுமன்றம்

## 10 மாதங்களுக்கு முன்னர் கலைப்பு

### நவம்பர் 14ஆம் திகதி தேர்தல்

பாராளுமன்ற பதவிக் காலம் நிறைவடைய 10 மாதங்கள் உள்ள நிலையில், பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (24) நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது. அதற்கான வர்த்தமானி அறிவித்தல், புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் கையொப்பத்தில் வெளியானது.

தொடர்ச்சி P2



ஆதரவை வலியுறுத்தி

## ஐ.எம்.எப். ஜனாதிபதிக்கு கடிதம்



ஜனாதிபதி அனுரகுமரவிற்கான ஆதரவை வலியுறுத்தி சர்வதேச நாணய நிதியம் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜியோர்ஜிவா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனாதிபதிக்கான ஆதரவை வெளியிட்டுள்ளதுடன் இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி சீர்திருத்தங்களிற்கு உதவ தயாராகவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கையுடன் காணப்பட்ட காணப்பட்ட

தொடர்ச்சி P2

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்; கிழக்கு ஆளுநர் லால் ரத்னசேகர

எஸ்.கீதபொன்கலன்





வடக்கு மாகாண ஆளுநராக யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், கிழக்கு மாகாண ஆளுநராகப் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர, நவம்பர் மாதம் 1962ஆம் ஆண்டு பிறந்தார். மனைவியின் பெயர் மல்லிகா ரத்ணசேகர.

தொடர்ச்சி P2

## “கடவுச்சீட்டு வரிசைக்கு விரைவில் தீர்வு”



கடவுச்சீட்டிற்காக மக்கள் நீண்டவரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைக்கு முடிவு காண்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன, ஒக்டோபர் 15 முதல் 20 திகதிக்குள் புதிய கடவுச்சீட்டு முறை அறிமுகப்படு த்தப்படும்,அந்த காலத்திற்குள் இந்த விடயத்திற்குத் தீர்வை காண விரும்புகின்றேன் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஹர்ஷவுக்கு விளக்கமறியல்

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடியும் வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உயர் நீதிமன்றம், புதன்கிழமை (25) உத்தரவிட்டுள்ளது.


இலங்கையில் இணையம் மற்றும் வெளிநாட்டு வீசா நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கிய அமைச்சரவை தீர்மானத்தை இடைநிறுத்திய தனது உத்தரவை நடைமுறைப்படுத்த தவறியதற்காக அவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.



நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய மீது உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் ப்ரீத்தி பத்மன் சூரசேன, குமுதுனி விக்ரமசிங்க, அச்சலா வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு, இந்த வழக்கை ஜனவரி 22ஆம் திகதி ஒத்திவைத்தது.

## மூக்கை அழுத்தி மகளை கொன்ற தாய்



தனது ஒரு வயது, ஐந்து மாதங்களேயான மகளை மூக்கை அழுத்தி கொன்றதாகக் கூறப்படும் தாய் கைது செய்யப்பட்டுள்ளதாக கலஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலாஹா பகுதியைச் சேர்ந்த இருபத்தொரு வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது கணவர் வீட்டிலிருந்து வெளியில் சென்றதன் பின்னர்,

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியை சந்தித்தார் மத்திய வங்கியின் ஆளுநர்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்ற கலந்துரையாடலில் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## பின் ஆசனத்தில் பயணிப்பவர்களுக்கு சிக்கல்

வி.ரி.சகாதேவராஜா



மோட்டார் சைக்கிளை செலுத்துவோரின் பின்னால் அமர்ந்திருந்து பயணிப்பவர்கள் தொடர்பான சட்டம் விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எஸ். ஜெயலத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 10 மாதங்களுக்கு முன்னர் கலைப்பு

சனிக்கிழமை (21) நடைபெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் (ஜேவிபி) தலைவர் அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றார். திங்கட்கிழமை (23) ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார். அத்துடன், தேசிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹரிணி அமரசூரியவை இடைக்கால பிரதமராகப் பதவியில் செவ்வாய்க்கிழமை (24) அமர்த்தினார்.

அரசியல் குடும்பப் பின்னணியற்ற தெற்காசியாவின் முதல் பெண் பிரதமராக அவர் பதவியேற்றுள்ளது பல்வேறு நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த நிலையில் பாராளுமன்ற பதவிக் காலம் முடிய 10 மாதங்கள் உள்ள நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறுகிறது. வேட்புமனு தாக்கல் ஒக்டோபர் 4ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் 11ஆம் திகதி வரை நடைபெறும். தேர்தலுக்குப் பிறகு புதிய பாராளுமன்றம் நவம்பர் 21இல் கூடும் என்று வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் புதன்கிழமை (25) முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

முன்னதாக, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது, அனுரகுமார திசாநாயக்க முந்தைய அரசாங்கங்களில் புரையோடியிருந்த ஊழல், வீண் விரயம், மோசடி முறைகேடுகளுக்கு எதிரான புதிய சட்டங்கள் உள்ளிட்ட 23 உடனடி மாற்றங்களை அமுல்படுத்துவேன் என அறிவித்திருந்தார்.

ஆனால், பாராளுமன்றத்தில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225இல் பெரும்பான்மையை நிரூபிக்க 113 இடங்கள் வேண்டும். தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே உள்ள நிலையில், புதிய சட்டங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குப் பெரும்பான்மை பலம் வேண்டும். மேலும், தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு ஆதரவு வழங்கக் கூடிய வேறெந்த கட்சியும் கிடையாது.

இதனால், புதிய சட்டங்களை இயற்றுவதில் சிக்கல் இருந்த சூழலில் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தான் அறிவித்த அதிரடி சட்டங்களை அமல்படுத்த என்ன நடவடிக்கைகளை எடுக்க போகிறார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது. இந்நிலையில், பாராளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.எம்.எப். ஜனாதிபதிக்கு கடிதம்

ஈடுபாட்டினை சர்வதேச நாணய நிதியத்தில் உள்ள நாங்கள் மிகவும் பெறுமதி வாய்ந்த விடயமாகக் கருதுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் உறுதியான பங்காளியாகயிருப்பதோடு, இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடனான தற்போதைய திட்டம் உட்பட சீர்திருத்த இலக்குகளை அடைவதற்கு உதவதயாராகவுள்ளோம் என்ற உத்தரவாதத்தை இந்த தருணத்தில் வழங்கவிரும்புகின்றேன் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிரிஸ்டலினா ஜியோர்ஜிவா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## போலி நகைகளை அடகுவைத்த பெண்ணுக்கு விளக்கமறியல்

தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் போலி நகைகளை அடகு வைத்து பணத்தை எடுத்த பெண், ஹட்டன் நீதவான் எம்.பரூக்தீனின் உத்தரவின் பேரில், எதிர்வரும் 9 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹட்டன் பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை (24) கைது செய்யப்பட்ட அந்த பெண், ஹட்டன் நீதவான் நீதிமன்றில் புதன்கிழமை (25) ஆஜர்படுத்தப்பட்டார்.

வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெலிஓயா தோட்டத்தில் வசிக்கும் 48 வயதுடைய தாயே விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவர் மூன்று பிள்ளைகளின் தாயாவார்.

கொழும்பு பகுதியில் பணிபுரியும் சந்தேகத்திற்கிடமான பெண், போலியான தங்க முலாம் பூசப்பட்ட சிறிய மோதிரங்கள், பஞ்சாயுதங்கள், காதணிகள் போன்றவற்றை பிரதான நகரங்களில் உள்ள அடமான மையங்கள், பொது மற்றும் தனியார் வங்கிகளுக்கு கொண்டு சென்று அடமானமாக பணம் பெற்று வந்துள்ளார்.

அடகு எடுத்துச் செல்லும் தங்க நகைகளை ஆய்வு செய்யும் இயந்திரங்களில் கூட சிக்காத வகையில் இந்த போலி நகைகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு தயார் செய்யப்பட்ட சில போலி மோதிரங்களை பெண் அடகு அடகு வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவை தொடர்பில் அடகு நிலைய உரிமையாளர் ஹட்டன் பொலிஸாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் ஹட்டனில் (25) குறித்த அடகுக் கடையில் சந்தேகநபரான குறித்த பெண்ணை ஹட்டன் பொலிஸாரின் உத்தியோகத்தர்கள் கைது செய்தனர்.

அவரிடம் இருந்து பல போலி மோதிரங்களை கண்டுபிடித்துள்ளனர். சந்தேகத்திற்குரிய பெண் நீண்டகாலமாக இந்த மோசடியை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதாகவும், இது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு (24) முதல் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்திற்கிடமான பெண் நீண்டகாலமாக இந்த முறைகேடான நடவடிக்கைகளை மேற்கொண்டு பெருமளவு பணம் சம்பாதித்துள்ளதாகவும், சந்தேகநபர் ஹட்டன் நகரில் இவ்வாறு தங்க நகைகளை அடகு வைத்துள்ளதாகவும் ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன தெரிவித்தார்.




## கடந்த அரசாங்கங்களில் பயன்படுத்திய வாகனங்கள்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சுச் செயலாளர்கள் பயன்படுத்திய பெருமளவிலான 'உயர்ரகத' வாகனங்கள் தற்போது கொழும்பு காலி முகத்திடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கை மன்ற கல்லூரி மற்றும் லக்சலாவிற்கு அருகாமையில் வேறு வாகனங்கள் இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன.

அவற்றைப் பயன்படுத்திய அதிகாரிகள் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், பல இடங்களில் இவ்வாறு நிறுத்திவிட்டு சென்றுவிட்டனர் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் வசந்த சமரசிங்க, வாகனங்களை பார்வையிட்டதன் பின்னர் இவ்வாறு தெரிவித்தார்.

அநுர திஸாநாயக்க ஜனாதிபதியாக இல்லாவிட்டால் இந்த வாகனங்கள் இன்னும் வீதியில் ஓடும் எனவும் சமரசிங்க தெரிவித்தார்.

பொதுமக்களின் எரிபொருள் மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்டு வாகனங்கள் பராமரிக்கப்பட்டதாக தெரிவித்த வசந்த சமரசிங்க, ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான 833 வாகனங்கள் உள்ளதாக பதிவேடுகளில் உள்ளன என்றார்

அந்த 833 வாகனங்களில் 29 வாகனங்கள் 2022 ஆம் ஆண்டளவில் காணாமல் போயுள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் அந்த வாகனங்களை விழுங்கினார்களா என்ற பிரச்சினையும் எழுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்




## 5 நாட்களில் பெறுபேறு

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றார்.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 3,527 பரீட்சை நிலையங்களில் நடத்தப்பட்டதுடன், 452,979 விண்ணப்பதாரர்கள் அதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் 387,648 பாடசாலை விண்ணப்பதாரிகளும் 65,331 தனியார் விண்ணப்பதாரிகளும் அடங்குவர்.

## "பொதுத் தேர்தலில் ஜனாதிபதிக்கு வெற்றி"

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அவரது அரசாங்கமும் வெற்றியீட்டக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அனுரகுமார திஸாநாயக்கவின் நடத்தை மற்றும் அவரது அறிக்கைகளின் அடிப்படையில், மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றும் பலம் இந்த அரசாங்கத்திற்கு இருப்பதாக நான் நம்புகிறேன்," என்று திஸாநாயக்க கூறினார்.

தற்போதைய அரசாங்கத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கக் கூடாது என தாம் நம்புவதாகத் தெரிவித்த திஸாநாயக்க, பொதுத் தேர்தலில் தேர்தல் வெற்றி மற்ற கட்சிகளுக்கு கடினமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

"அது சுலபமாக இருக்காது. தற்போதுள்ள எம்.பி.க்களில் இருந்து சிறிய அமைச்சரவையை நியமித்து, அரசாங்கத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் வெற்றிகரமான ஜனாதிபதி எமக்கு இருக்கிறார்" என அவர் தெரிவித்தார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி (NPP) குறைந்தது 6.5 மில்லியன் வாக்குகளைப் பெறும் என்றும் திஸாநாயக்க கணித்துள்ளார். " தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இப்போது அந்த நன்மையைப் பெற்றுள்ளன. எவ்வாறாயினும், தேர்தலுக்கு பலமான எதிர்க்கட்சியை உருவாக்குவதற்கு ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்தால் அது சிறந்ததாக இருக்கும் என நான் நம்புகிறேன்" என திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

## "கடவுச்சீட்டு வரிசைக்கு விரைவில் தீர்வு"

சட்டம் ஒழுங்கை பேணுவதற்கும் பொலிஸார் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள அவர், பொலிஸார் அரசியல் தலையீடுகள் இன்றி சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சூழல் உடனடியாக உருவாக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கடமைகளை உத்தியோகப்பூர்வமாக புதன்கிழமை (25) பொறுப்பேற்றதன் பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடவுச்சீட்டு விவகாரத்திற்குத் தீர்வை காண்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மீதான பொதுமக்கள் நம்பிக்கை குறைவடைந்துள்ளதை ஏற்றுக்கொண்டுள்ள அவர் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும்போது, செய்த தவறுகளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் திருத்திக்கொள்ளவேண்டும். சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸாருக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்குவேன் எந்த அரசியல் தலையீடும் இருக்கக்கூடாது அரசாங்க அமைச்சர்கள் , பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பொலிஸ் உயர் அதிகாரிகளைத் தொடர்புகொள்ள மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்; கிழக்கு ஆளுநர் லால் ரத்னசேகர

இவர்களுக்கு ஒரு மகன் இருக்கின்றார்.

இவர், இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக 2017ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் நவம்பர் 2023ஆம் ஆண்டு வரை பணியாற்றியுள்ளார்.

தனது ஆரம்பக் கல்வி கந்தளாயில் உள்ள அக்ரபோதி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கொழும்பு-நாலந்தா கல்லூரியிலும் (1972-1980) கற்றார். அத்துடன், ரஷ்யாவின் மக்கள் நட்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளார்.

1988இல் வேதியியலில் ஹானர்ஸ் பட்டம் பெற்றார். 1993இல் அவர் வேதியியலில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றார்.

1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகச் சேர்ந்து 2018இல் வேதியியலில் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். மற்றும் 1999 முதல் 2005 வரை பயன்பாட்டு அறிவியல் பீடத்தின் உபவேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

2017 ஜனவரியில் இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். 2021 இல் துணைவேந்தர்கள் மற்றும் இயக்குநர்கள் குழுவின் (CVCD) தலைவராக பணியாற்றியுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள், சுற்றுச்சூழல் வேதியியல், கோட்பாட்டு வேதியியல், உயர் கல்வியில் தர உத்தரவாதம் மற்றும் அறிவியல் கல்வி ஆகியவற்றில் அவரது ஆராய்ச்சி ஆர்வங்கள் உள்ளன. ரத்னசேகர பல பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பட்டறைகளில் ஒரு பயிற்சியாளராகவும் வளவாளராகவும் இருந்துள்ளார். அவர் ஒரு சுயாதீன பத்திரிகையாளர், எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் என நன்கு அறியப்பட்டவர்.

## பின் ஆசனத்தில் பயணிப்பவர்களுக்கு

"மோட்டார் சைக்கிளை செலுத்துவோரின் பின்னால் அமர்ந்திருந்து பயணிப்போர் இரு பக்கங்களும் கால்களை வைத்து அமர்ந்து செல்ல வேண்டும். ஒரு பக்கம் காலை வைத்துச் செல்கின்ற வேளையில் பல விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மாவடிப்பள்ளியில் இடம்பெற்ற விபத்தில், 14 வயது சம்மாந்துறை மாணவி ஒருவர் பரிதாபமாகப் பலியாகி இருக்கிறார். அதற்கு இதுவே பிரதான காரணமாகக் கண்டறியப்பட்டது.

மோட்டார் போக்குவரத்து சட்டத்தின்படி பின் ஆசனத்தில் அமர்பவர்கள் இரு பக்கங்களும் கால்களை போட்டு அமர்ந்திருந்து பயணிக்க வேண்டும். அதுவே சட்டமாகும். எனவே காரைதீவு பகுதியில் இடம்பெறும் அநியாயமான உயிரிழப்புகளைத் தவிர்க்க வேண்டுமாக இருந்தால், இந்த சட்டம் மிக விரைவில் அமுலுக்கு கொண்டு வரப்பட வேண்டும் அதற்கு முன்னதாக இந்த அறிவித்தலைப் பொதுமக்களுக்கு விடுக்கின்றேன்" என்றார்.

## மூக்கை அழுத்தி மகளை கொன்ற தாய்

சந்தேக நபரான அந்த பெண்ணும், அவரது மகள் மட்டுமே வீட்டில் இருந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அப்போது, சந்தேக நபர் அந்த தாய், கோபமடைந்து மகளின் மூக்கு மற்றும் வாயை இறுக்கமாக மூடியதால், மகள் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் நடத்திய விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த கண்டி பதில் நீதவான் மஹிந்த லியனகே, நீதவான் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தைப் பிரேதப் பரிசோதனைக்காக பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு கூறினார்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதியை சந்தித்தார் மத்திய வங்கியின் ஆளுநர்

நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தனவும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் பல விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஊழியர் சேமலாப நிதியில் நிலுவை இருப்பதாக கூறி

# நிதி மோசடி




மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள பெருந்தோட்ட பகுதிகளில் தோட்டத் தொழிலில் இருந்து ஓய்வூபெற்ற ஊழியர் சேமலாப நிதி திணைக்களத்தின் மூலம் முழுமையாகச் செலுத்தப்படவில்லை என்றும் மேலதிக பணம் நிலுவையில் உள்ளதாகவும் அதனைப் பெற்றுத் தருவதாகக் கூறி பல தோட்டத் தொழிலாளர்களிடம் நபர் ஒருவர் பணம் வசூலித்தமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இச்சம்பவம் மஸ்கெலியா-டீசைட் மற்றும் மல்லியப்பு தோட்டங்களில் வெள்ளிக்கிழமை(20) பதிவாகியுள்ளது.

ஊழியர் சேமலாப நிதி திணைக்களத்தின் முத்திரை பதிக்கப்பட்ட கடிதத்தின் மூல பிரதிகளைக் காட்டி ஒருவருக்கு தலா ஐந்து இலட்சத்திற்கும் மேல் பணம் செலுத்தப்படாமல் உள்ளதாகவும், அதனைத் திணைக்களத்தின் அதிகாரி மூலமாகப் பெற்றுத் தருவதாகவும் அதற்கான முற்பணமாக இரண்டாயிரம் ரூபாய் செலுத்துமாறு கோரியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மஸ்கெலியா லக்ஷபான தோட்டத்தில் வசித்து வரும் அந்த நபர் மஸ்கெலியா பகுதியில் பல இடங்களில் தனது கைவரிசையைக் காட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆகையால் மேற்படி விவகாரம் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## வருடாந்த திருவிழா...

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை சிற்றாலய வருடாந்த திருவிழா வைத்தியசாலை ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸின் ஒழுங்குபடுத்தலில் அண்மையில் நடைபெற்றுள்ளது.













## அரசியலில் இருந்து விலகுகிறார் அலி சப்ரி

தமது அரசியல் வாழ்வு நிறைவுக்கு வருவதாக முன்னாள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தனது X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பொதுச் சேவையை நிறைவு செய்யும் வேளையில், தமது முயற்சியை ஆதரித்து வழிகாட்டியவர்கள் மற்றும் ஆக்கப்பூர்வமாக விமர்சித்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடினமான காலகட்டத்தில் நீதி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் என ஒவ்வொரு பதவியும் சவால்களுடன் கிடைத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

தன் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கு முடிந்த அளவுற்கு செயற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டுப்படுத்த முடிந்தவற்றைக் கட்டுப்படுத்துங்கள், கட்டுப்படுத்த முடியாதவை குறித்து நேரத்தை வீணடிக்க வேண்டாம் என தனது தந்தை கூறிய வார்த்தைகள் வழிகாட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசியல் வாழ்க்கையில் இருந்து விலகும் இந்த தருணத்தில் தனது முதல் ஆர்வமான சட்டத்துறையில் மீண்டும் ஈடுபடுவது குறித்து எதிர்பார்த்து ள்ளதாகவும் தனது X தளத்தில் அவர் சுட்டி க்காட்டி யுள்ளார்.



## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

மன்னார்- மாந்தை மேற்கு பிரதேசம், மூன்றாம் பிட்டி பகுதியில் செவ்வாய்க்கிழமை(24) மாலை சுமார் 12 இலட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனைக்காக பொதி செய்யப்பட்ட 3 கிலோ 570 கிராம் கேரள கஞ்சாவை அவரது இல்லத்தில் வைத்திருந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



தள்ளாடி இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், மன்னார் விசேட அதிரடிப்படை அதிகாரிகளின் உளவுப் பிரிவினருடன் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான நபர் மற்றும் சான்றுப் பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## விபத்தில் பெண் பலி

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடியில் செவ்வாய்க்கிழமை (24) மாலை இடம்பெற்ற விபத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த குடும்ப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடியிலிருந்து மட்டக்களப்புக்கு தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, பின்னால் வந்த லொறி மோட்டார் சைக்கிளில் மோதி சென்றுள்ளது. இதன்போது, காத்தான்குடி அப்றார் பள்ளிவாயல் வீதியில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான முகம்மட் இஸ்மாயில் உம்மு நசூஹா (வயது 46) எனும் பெண் உயிரிழந்துள்ளார்

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள்

அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள், செவ்வாய்க்கிழமை (24) நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கான நியமனக்கடிதங்கள், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் வழங்கப்பட்டுள்ளன.



- பிரதமரின் செயலாளராக பிரதீப் சப்புதந்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளராக மஹிந்த சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.
- வெளிவிவகார அமைச்சின் செயலாளராக அருணி விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.
- நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், தொழில் அமைச்சின் செயலாளராக பிரதீப் யசரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.
- போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளராக கே.டி.எஸ்.ருவன்சந்திர நியமிக்கப்பட்டுள்ளார்.
- கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக திலகா ஜயசுந்தர செயற்படவுள்ளார்.
- பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கே.மகேசன் நியமனம் பெற்றுள்ளார்.
- வர்த்தகம், வணிகம், உணவு பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பதவி எம்.எம்.நயிமுதீனுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளராக எம்.பீ.அத்தபத்து நியமிக்கப்பட்டுள்ளார்.
- சுகாதார அமைச்சின் செயலாளராக வைத்திய நிபுணர் பாலித மஹிபால நியமிக்கப்பட்டுள்ளார்.
- சுற்றாடல், வனஜீவராசிகள், வனவளம், நீர் விநியோகம், பெருந்தோட்டக் கைத்தொழில், சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளராக பிரபாத் சந்திரகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.
- விவசாயம், காணி, கால்நடை வள, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலாளராக என்.எம்.விக்கிரமசிங்க நியமனம் பெற்றுள்ளார்.
- புத்த சாசனம், சமய மற்றும் கலாசார விவகாரம், தேசிய ஒருமைப்பாடுகள், சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக ரஞ்சித் ஆரியரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.
- வலுசக்தி அமைச்சின் செயலாளராக பேராசிரியர் உதயங்க ஹேமபால நியமிக்கப்பட்டுள்ளார்.

## டெங்கு நோய் பரவும் அபாயம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஸத் காரியப்பர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பொலிவேரியன் வீட்டுத் திட்டக் கிராமம் மற்றும் கடற்கரையோரப் பிரதேசம் என்பவற்றில் அதிகளவிலான நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அதனை கட்டுப்படுத்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இடைவிட்ட மழை மற்றும் வெப்பமான காலநிலை டெங்கு நுளம்பு பெருகுவதற்கு சாதகமான சூழலை தோற்றுவிக்கக்கூடும் என்ற காரணத்தினால் பிரதேச மக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழல், நீர் தேங்கி நிற்கும் பொருட்கள், நீர் தேங்கும் இடங்கள் , கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி , படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் தொழிற்படுமாறும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சாய்ந்தமருது கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை வளாகத்திலும், சுற்றுச் சூழலிலும் வாரத்திற்கு ஒரு முறை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதான பணிகளை முன்னெடுக்குமாறு பாடசாலை அதிபர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்திற்குக் கழிவுநீர் தேங்கியுள்ளதாகவும் இது குறித்து கல்முனை மாநகரசபையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதேச கலாசார விழா

■ க.அகரன்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் வவுனியா பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பிரதேச கலாசாரவிழா வெள்ளிக்கிழமை (27) இடம்பெறவுள்ளது.

இரண்டு பிரிவுகளாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வு காலை 9 மணி தொடக்கம் 12மணி வரை அமரர் கிருஷ்ணபிள்ளை உதயகுமார் நினைவு அரங்கிலும், மாலை 2 மணி தொடக்கம் 5 30 மணிவரை சின்னப்பு சுபாஷ்சிங்கம் நினைவு அரங்கிலும் இடம்பெறவுள்ளது.

காலை அரங்கு பிரதேச கலாசார பேரவையின் உப தலைவர் நாகலிங்கம் தியாகராஜா தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் மாலை அரங்கு வவுனியா பிரதேச செயலாளரும் கலாசார பேரவையின் தலைவருமான நாகலிங்கம் கமலதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச கலாசார பேரவை கேட்டு நிற்கின்றது.

## பாராளுமன்றம் அருகில் அனர்த்தம்

பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் இராணுவத்தினருக்குச் சொந்தமான டிஃபென்டர் வாகனம் புதன்கிழமை (25) காலை விபத்துக்குள்ளான நிலையில், பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் உள்ள வீதியில் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது வாகனத்தில் சாரதி மட்டும் இருந்ததாகவும் அவருக்கு எவ்விதமான அனர்த்தமும் ஏற்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.



சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் வாகனம் அவ்விடத்திலிருந்து இராணுவத்தினரால் அப்புறப்படுத்தப்பட்டது.

## புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம்

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் (PMD) புதிய பணிப்பாளர் நாயகமாக கலாநிதி நஜித் இந்திக்கவை ஜனாதிபதி அனுரகுமார திrhநாயக்க நியமித்துள்ளார்.

கலாநிதி நஜித், ஹம்பாந்தோட்டை ரன்ன மகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக, பல்வேறு அரசு வைத்தியசாலைகளில் மருத்துவராகவும், வைத்திய அதிகாரியாக பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# பாதை தவறினால் தட்டிக் கேட்க தயங்க வேண்டாம்

ஜனநாயகம் விலை உயர்ந்தது. அதைப் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி அளப்பரியது. தெருவில் இருந்து எடுக்க முடியாது என்பதுடன் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதில் இருந்து இந்த நாட்டுக்கு புதிய பாதை திறக்கும். ஒட்டுமொத்த இலங்கை சமூகத்திற்கும் இது செல்லுபடியாகும்.

இறுதி வெற்றியாளர் நாட்டு மக்களாக இருக்க வேண்டும். மக்கள் சம்மதம் தெரிவித்து ஒரு நாடு என்ற பொறுப்பைத் தலைவரிடம் கொடுத்திருக்கும் வரை மக்கள் ஒதுங்கி நிற்க முடியாது. நாற்காலி அரசியல் சகாப்தம் இப்போது முடிவுக்கு வர வேண்டும். நாட்டின் வெற்றிக்காக வாக்களித்த மக்கள் அதனையே எதிர்பார்க்கின்றனர்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அவர் இந்த தேசத்தின் தலைவர் மட்டுமல்ல. இந்த நாடு நீண்ட காலமாகச் சுமந்து வந்த கடன் மலை இரண்டரை வருடங்களுக்கு முன் சரிந்தது. சலுகைகள் முதலியவற்றைக் கொடுத்து முடிவெடுத்ததன் விளைவு ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் உணரப்பட்டது.

இலங்கை இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் சட்ட கட்டமைப்பின் நடுவில் ஒரு படம் போல் உள்ளது. சில காலம் பொருளாதாரத்தில் இருந்து தலை தூக்கியது. இருப்பினும், சவாலான வேலை இங்கே தொடங்குகிறது. வரிச்சுமை குறித்து மக்களுக்கு இன்னும் பேசிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைப் பற்றி யோசிக்கின்றனர். ஊதியம் பெறுவோர், மாதத்தின் மீதமுள்ள மூன்று வாரங்கள் எப்படிச் செலவிடுவது என்று யோசிக்கின்றனர். அன்றாட கூலி வேலை செய்பவர்கள், சுயதொழில் செய்பவர்கள் போன்றவர்கள் இத்தகைய சுமையைத் தாங்கிக் கொண்டு வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபடுகிறார்கள்.

ஒரு நாட்டின் அனைத்துப் பிரச்சனைகளையும் ஒன்றாகத் தீர்க்க முடியாது. இந்த தலைவர்கள் சந்தனத்துடன் பிறந்தவர்கள் அல்ல. நான் மந்திரவாதியோ மாயாஜால காரனோ அல்ல என ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க சத்தியம் செய்ததை அடுத்து இந்த விடயம் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பல நடைமுறைக் கேள்விகளுடன், பதில் கிடைக்கவேண்டும். வாக்களிக்காத, வாக்களித்த அனைவரினதும் ஜனாதிபதி என்ற வகையில் இந்த நாட்டு மக்கள் அனைவரும் அவருடன் அந்த சவாலுக்கு அணிதிரள வேண்டும். விமர்சனம் கூட ஆக்கப் பூர்வமானதாக இருக்க வேண்டும், அரசியல் நிகழ்ச்சி நிரல்களால் இயக்கப்படக் கூடாது.

காலிமுகத்திடல் உள்ளிட்ட பல்வேறு இடங்களில், நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் வாகனங்களை பார்க்குமிடத்து, மக்களின் எவ்வளவு வரிப்பணம் வீணடிக்கப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது. இது, கடந்த அரசாங்கத்தில் மட்டுமே செய்யப்பட்டது அல்ல.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதியாகி இருக்காவிடின் இந்த வாகனங்கள் இன்னும் வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் அந்த சுமையையும் சுமந்துகொண்டிருப்பார்கள்.

இந்நிலையில், புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடியெடுத்து வைத்திருக்கும் பாதை, கரடுமுரடானது. அதில் பயணிக்க வேண்டும். அந்த பயணத்துக்கு ஒத்துழைக்க வேண்டும். பாதை தவறினால் தட்டிக்கேட்டவும் தயங்கக் கூடாது என்பதே எமது வலியுறுத்தலாகும்.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# உணர வேண்டியது அவசியம்

முருகானந்தம் தவம்

இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே .வி.பி.) மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் தலைவரான அனுரகுமார திசாநாயக்க கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 5,634,915 வாக்காளர்களின் நேரடி வாக்குகள் மூலமாகவும் 1,05,264 விருப்பு வாக்குகள் மூலமாகவும் தெரிவு செய்யப்பட்டு திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பிரதம நீதியரசர் முன்னிலையில் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக மூவர் கொண்ட அமைச்சரவை அமைக்கப்பட்டதுடன், செப்டெம்பர் 24 செவ்வாய்க்கிழமை நள்ளிரவு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் அரசியல் களம் அனல் பறக்கவுள்ள நிலையில், ஜனாதிபதி பதவியைத் தான் பறிகொடுத்து விட்டோம்.பிரதமர் பதவியையாவது கைப்பற்றுவோம் என்ற முனைப்பில் கட்சித் தலைவர்கள் செயற்படத் தொடங்கியுள்ளனர். இதில் ஐக்கிய மக்கள் சக்தி தமது பிரதமர் வேட்பாளர் சஜித் பிரேமதாச எனவும் அறிவித்து விட்டது. ஜனாதிபதித் தேர்தலில் இரு தடவைகள் தோல்வி கண்ட சஜித் பிரேமதாச, பிரதமர் பதவியையாவது கைப்பற்றுவாரா? என்பது தொடர்பில் பார்ப்போம்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கவின் வெற்றியை அமோக வெற்றி என சில ஊடகங்களும் அரசியல் ஆய்வாளர்கள் என கூறிக்கொள்பவர்களும் கூறி வந்தாலும், இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக 50 சத வீத வாக்குகளைக்கூடப் பெறமுடியாத நிலையில், விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டே அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகியுள்ள நிலையில், இந்த வெற்றி ஒருபோதுமே அமோக வெற்றியாகிவிட முடியாது. தேவையானால் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அல்லது தேசிய மக்கள் சக்திக்கு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் அதிகூடிய வாக்குகள் கிடைத்த தேர்தலாக இதனைக் கூறமுடியும்.

அத்துடன், இந்த ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியாக இந்த தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் அதன் முன்னாள் பிரதித் தலைவரும் தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தித் தலைவருமான சஜித் பிரேமதாசவும் பிரதான காரணமாக இருந்துள்ளார்கள் என்பதனையும் அவர்கள் இருவர் உட்பட யாரும் மறுத்துவிட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் அதன் அப்போதைய பிரதித் தலைவராகவிருந்த சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் ஏற்பட்ட தலைமைத்துவ போட்டியின் விளைவாக, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடாது சஜித் பிரேமதசாவுக்கு ரணில் விக்ரமசிங்க இடமளித்த நிலையில், அதில் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்ட சஜித் பிரேமதாச 55,64,239 வாக்குகளைப்பெற்று கோட்டாபய ராஜபக்ஷவிடம் 14 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

இதன் பின்னரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்ற சஜித் தொடர்ந்தும் போராடிய நிலையில், அது சரிப்பட்டுவராது போகவே, பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை ஆரம்பித்து அதன் தலைவரானார். அன்றிலிருந்தே ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சக்தியினதும் வீழ்ச்சி ஆரம்பமானதுடன், ரணில் விக்ரமசிங்கவினாலும் சஜித் பிரேமதாசவினாலும் எதனையும் தனித்து நின்று சாதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. இந்த பலவீனமான நிலைமையே இன்றைய எதிர் அரசியல் கட்சிகளின் பலமாக மாறியது.

தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற தலைவர்களான ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் இம்முறை பிரிந்து நின்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதனால் இந்தமுறை தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பதா சஜித்துக்கு வாக்களிப்பதா என்ற நெருக்கடிக்கு, குழப்பத்துக்கு ஆளாகியுள்ளனர். இதுதொடர்பில் செப்டெம்பர் 21ஆம் திகதிக்குப் பின்னர் தெரிந்து கொள்ளமுடியும் என தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் அறிவிப்பை விடுத்த ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட எம்.பியும் முன்னாள் நீதி அமைச்சருமான சட்டத்தரணி தலதா அத்துகோரள தெரிவித்திருந்தமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

காலா காலமாக எமது கட்சிக்கு வாக்களித்து வந்த வடக்கு, கிழக்கு மக்களுக்கும் இந்த முறை தீர்மானம் எடுக்க முடியாத நிலையை ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் ஏற்படுத்தி இருக்கிறார்கள் அதாவது இந்த முறை தமிழ் மக்களின் அபிமானம் பெற்ற இவ்விரு வேட்பாளர்களும் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிடுவதனால் இந்தமுறை தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பதா? சஜித்துக்கு வாக்களிப்பதா? என்ற நெருக்கடிக்கு, குழப்பத்துக்கு ஆளாகியுள்ளனர். இதுதொடர்பில் செப்டம்பர் 21ஆம் திகதிக்குப் பின்னர் கண்டுகொள்ள முடியும். எனவே, சஜித் பிரேமதாச இன்னும் 5 வருடங்களுக்குப் பொறுத்திருந்தால், எங்களுக்கு இந்த பாரிய சவால் இருக்காது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், அந்த விடயம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் பொருந்தியுள்ளது என்பதனை அண்மைய தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டி நிற்கின்றன. அது எவ்வாறு என்பதனைப் பார்ப்போம்.

உதாரணமாக, நுவரெலியா மற்றும் புத்தளம் மாவட்டங்களை இங்கு எடுப்போம். மாத்தளை மாவட்டத்தில் அனுரகுமார திசாநாயக்க பெற்ற வாக்குகள் 1,40,544. சஜித் பிரேமதாச பெற்ற வாக்குகள் 1,21,803. ரணில் விக்ரமசிங்க பெற்ற வாக்குகள் 53,829. இதில் சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க இருவரும் பெற்ற மொத்த வாக்குகள் 1,75,632. இந்தளவு வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய வாக்குகள். ஆனால், ரணில், சஜித் பிரிந்து நின்றதால் வாக்குகளும் பிரிந்து நிற்கின்றன. அதனால் அனுரகுமார முன்னிலை பெற்றார்.

அதேபோன்று புத்தளம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அனுரகுமார திசாநாயக்க பெற்ற வாக்குகள் 2,07,134. சஜித் பிரேமதாச பெற்ற வாக்குகள் 1,73,382. ரணில் விக்ரமசிங்க பெற்ற வாக்குகள் 60,719. இதில் சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க இருவரும் பெற்ற மொத்த வாக்குகள் 2,34,101. இந்தளவு வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குரிய வாக்குகள். ஆனால், ரணில், சஜித் பிரிந்து நின்றதால் வாக்குகளும் பிரிந்து நிற்கின்றன.அதனால் அனுரகுமார முன்னிலை பெற்றார்.

இவ்வாறு பல மாவட்ட முடிவுகளை எடுத்துப் பார்த்தால், ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோரின் பிளவே வாக்குகளையும் பிளவுபடுத்தி அனுரகுமார திசாநாயக்கவின் வாக்குகளை அதிகமாக்கி அவரை முன்னிலைப் படுத்தியுள்ளது. இதற்குத் தேர்தலில் மூவரின் மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை பார்த்தோமானால் இந்தப் பிளவின் பலவீனத்தை நமக்குப் புரிந்துகொள்ள முடியும்.

இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாகியுள்ள அனுரகுமார திசாநாயக்க பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகள் 56,34,915.இரண்டாவது இடத்தைப் பிடித்த சஜித் பிரேமதாச பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகள் 43,63,035.மூன்றாவது இடத்தைப் பிடித்த ரணில் விக்ரமசிங்க பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகள் 22,99,767.இதில், சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க ஆகிய இருவரும் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 66,62,802.இது அனுரகுமார திசாநாயக்க பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை விடவும் 10,27,887 வாக்குகள் அதிகம்.

எனவே, இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காகக் கடந்த சனிக்கிழமை நடந்த தேர்தலில் மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்ததால் அனுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்றார் என்பதற்கு அப்பால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் அதன் பிரதித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாசாவுக்குமிடையில் ஏற்பட்ட பிளவு, புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுக்காத் தன்மை, இணங்கிப் போகாத் தன்மை குறிப்பாக 'நான் என்ற அகங்காரம்' அல்லது அரசியல் தலைக்கனமே அனுரகுமார திசாநாயக்க 50 சதவீத வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் அவரை இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக்கியுள்ளது.

தற்போது கூடக் காலம் கடந்து விடவில்லை. விரைவில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது, அதிலாவது ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் இணைந்தார்களேயானால் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சக்தியினதும் வாக்குகள் மீண்டும் ஓரணியில் இணையும். இதன்மூலம் பாராளுமன்றத் தேர்தல் ஊடாக பிரதமர் பதவியைக் கைப்பற்றுவதுடன், அரசையும் அமைத்துக்கொள்ள முடியும். இதனை இரு தலைவர்களும் உணர வேண்டியது அவசியமும் அவசரமும் கூட.



## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ, உள்ளூராட்சி மன்றங்களோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும், வெற்றிலையை வாயில் குதப்பியவாறு, அதைப் பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள்; மனசாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக, பேருந்து தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பமான விடயமாகி விட்டது.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாலங்களை புனரமைத்து தரவும்

முல்லைத்தீவு-பரந்தன் ஏ 35 வீதியில் உள்ள வட்டுவாகல் பாலம் மற்றும் புளியம்பக்கனை 10ஆம் கட்டை பகுதியிலுள்ள பாலம், பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன், உயிரிழப்புக்களும் இடம்பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது .


கடந்த 2013ஆம் ஆண்டு முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மற்றும் மாகாண சபை ஆகியவற்றில் நடந்த கலந்துரையாடல்களில் இது தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது .

பாலத்தின் இரு பகுதிகளிலும் 15க்கும் மேற்பட்ட விபத்துக்கள் மற்றும் இரண்டு உயிரிழப்புக்களும் நிகழ்ந்துள்ளன. எனவே, குறித்த இருபாலங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- யது பாஸ்கரன்









கஜீபா ஜீவராத்தினம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

*"You're Too Good to Feel This Bad"* என்ற நூலை எழுதியவர். தொழில்முனைவோர், பேச்சாளர் மற்றும் எழுத்தாளரான 'நேட் டல்லாஸ்' ஆவர்.

இந்த புத்தகம் வாசகர்கள் மன உளைச்சலில் இருந்து விடுபடவும், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும், வாழ்க்கையில் அதிக திருப்தியைக் காணவும் உதவுவதில் கவனம் செலுத்துகிறது.

நேட் டல்லாஸ் தனிப்பட்ட கதைகள், நடைமுறை ஆலோசனைகள் மற்றும் தொடர்புடைய அணுகுமுறையைப்பயன்படுத்தி வாசகர்களின் மன அழுத்தத்தின் ஆதாரங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் அவர்களின் மன, உணர்ச்சி மற்றும் உடல் ஆரோக்கியத்தின் கட்டுப்பாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதை வழிநடத்துகிறது.

நேட் டல்லாஸ் அவர் தொழில்முனைவு மற்றும் வணிகத் தலைமைத்துவத்தில் முக்கியமானவராக அறியப்படுகிறார்.

அவரது பணி பெரும்பாலும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும், நேரத்தை மேம்படுத்துவதற்கும், மேலும் நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கும் வழிகளை எடுத்துக்காட்டுகிறது. இன்றைய வேகமான உலகில் சோர்வைச் சமாளிப்பதற்கான புதிய கண்ணோட்டத்தைத் தேடும் இந்த புத்தகம் பெரும் தக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.




*You're Too Good To Feel This Bad* என்ற புத்தகமானது மனிதனின் தனிப்பட்ட வளர்ச்சி, உணர்ச்சி நல்வாழ்வில் ஒரு புத்துணர்ச்சியை வழங்குவாதாற்க்கான உத்திகளை ஆழமாகப் பேசுகிறது.

இந்த புத்தகம் வாசகர்கள் மன உளைச்சலில் இருந்து விடுபடவும், அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும், வாழ்க்கையில் அதிக திருப்தியைக் காணவும் உதவுவதில் கவனம் செலுத்துகிறது.

நேட் டல்லாஸ் தனிப்பட்ட கதைகள், நடைமுறை ஆலோசனைகள் மற்றும் தொடர்புடைய அணுகுமுறையைப் பயன்படுத்தி வாசகர்களின் மன அழுத்தத்தின் ஆதாரங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் அவர்களின் மன, உணர்ச்சி மற்றும் உடல் ஆரோக்கியத்தின் கட்டுப்பாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதை வழிநடத்துகிறது.

நேட் டல்லாஸ் அவர் தொழில்முனைவு மற்றும் வணிகத் தலைமைத்துவத்தில் முக்கியமானவராக அறியப்படுகிறார்.

அவரது பணி பெரும்பாலும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும், நேரத்தை மேம்படுத்துவதற்கும், மேலும் நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கும் வழிகளை எடுத்துக்காட்டுகிறது. இன்றைய வேகமான உலகில் சோர்வைச் சமாளிப்பதற்கான புதிய கண்ணோட்டத்தைத் தேடும் இந்த புத்தகம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆசிரியர் நேட் டாலஸ் மன ஆரோக்கியத்தை அனுதாபத்துடன் அணுகுகிறார். நடைமுறை ஆலோசனைகளை வாழ்க்கையுடன் தொடர்புடைய நிகழ்வுகளுடன் இணைக்கிறார். இது வாசகர்களுக்கு அவர்களின் சொந்த மதிப்பை அடையாளம் காண உதவுகிறது.

இந்த புத்தகத்தின் தனித்துவமான அம்சங்களில் ஒன்று, சிக்கலான உணர்ச்சி நிலைமைகளின் போது எளிமை மற்றும் தெளிவுடன் எவ்வாறு கடந்து வருவது என்பதுதான்.

இது வாசகரைத் தொழில்நுட்ப வாசகங்களால் தாக்காது, மாறாக சுய சந்தேகம், பதட்டம், குற்ற உணர்வு போன்ற பொதுவான மனித பிரச்சனைகளில் கவனம் செலுத்துகிறது. அவற்றைக் கடக்க மென்மையான ஆனால் பயனுள்ள உத்திகளை வழங்குகிறது.

அத்தியாயங்கள் சிறியதாக இருப்பதால், அதிக சிரமமின்றி விஷயங்களைப் படித்து எளிதாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

பயிற்சிகள், தூண்டுதல்கள், வாசகர்கள் தங்கள் உணர்வுகளுடன் சுறுசுறுப்பாக ஈடுபட ஊக்குவிக்கின்றன, மேலும் அவர்கள் சுய மதிப்பின் வலுவான உணர்வை வளர்க்க உதவுகின்றது .சமூக அழுத்தங்களிலிருந்து விலகி, நிறைவான வாழ்க்கையை வாழ்வது என்றால் என்ன என்பதைப் பற்றிய முழுமையான மற்றும் தனிப்பட்ட புரிதலை நோக்கி நகர்கிறது. வாழ்க்கையில் அதிக மகிழ்ச்சியையும் அமைதியையும் காண விரும்பும் எவருக்கும் தொடர்புப்படுத்தக்கூடிய மற்றும் நடைமுறைக்கு இந்த புத்தகம் வழிகாட்டியாகும்.

இந்த புத்தகம் நிஜ உலக தீர்வுகளை வழங்குகிறது, இது குறிப்பாக வேலைப்பளு தொழில்முனைவோர், உயர் சாதனையாளர்களைக் கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. புத்தகத்தின் முக்கிய பலம் அதன் நடைமுறைத் தன்மை.

டல்லாஸ் வாசகர்களை ஓய்வு எடுக்கச் சொல்லவில்லை - அவர் உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய உறுதியான, செயல்படக்கூடிய வாழ்க்கை படிமுறைகளை விளக்குகிறார்.

நேரத்தைத் திறம்பட நிர்வகித்தல், எல்லைகளை அமைத்தல், தூக்கத்தை மேம்படுத்துதல் போன்ற தலைப்புகள் மற்றும் உடல் ரீதியாகச் சுறுசுறுப்பாக இருத்தல் ஆகிய அனைத்து விடயங்களும் கவனிக்கப்படுகின்றன. இந்த சிறிய மாற்றங்கள் ஒட்டுமொத்த நல்வாழ்வை எவ்வாறு கணிசமாக மேம்படுத்தலாம் என்பதில் கவனம் செலுத்துகிறது.

டல்லாஸ் தொடர்ந்து செயல்படுவதற்கும் சாதிப்பதற்கும் சமூக அழுத்தங்களைக் காணப்படுகின்றன என்பதனை ஒப்புக்கொள்கிறார், ஆனால் தனிப்பட்ட மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியத்தை உள்ளடக்கிய வகையில் வெற்றியை மறுவரையறை செய்வதற்கான ஒரு கட்டாய நடைமுறையை உருவாக்குகிறார்.

ஒட்டுமொத்தமாக, புத்தகம் விரைவான, ஊக்கமளிக்கும் வாசிப்பு, வாழ்க்கையின் தேவைகளால் அதிகமாக உணரும் எவருக்கும் ஏற்றது.

இது உயிர்வாழ்வதோடு மட்டுமல்லாமல் செழித்து வளர்வதற்கும் ஒரு வழிகாட்டியாகும், வாசகர்கள் சமநிலையையும் நிறைவு உணர்வையும் மீண்டும் பெற உதவுகிறது.

# களிகம்பு


கனேஸ்குமார் மதியந்தி,
ஊடககற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**மனித இனம் தோன்றி வளர்ந்த இடங்களில் எல்லாம் அறிஞர்களின் இயல்புகளுக்கும் வாழ்வியல் முறைகளுக்கும் ஏற்றவாறு மக்கள் தம் உணர்வுகளை வாய்மொழி மூலமாகவோ கைவினைகள் மூலமாகவோ வெளிப்படுத்தி வருவதனை பொதுவாக நாட்டுப்புறக் கலைகள் எனலாம். கலை என்பது கருத்தின் உறைவிடமாகவும் அழகின் சிறப்பிடமாகவும் உள்ளது. இன்பம் அதனது பயனாகும் ஒருவர் முன்பு அனுபவித்த உணர்வை தன் உள்ளத்தில் மீண்டும் எழுப்பி அல்லது சொல் வடிவங்கள் மூலம் அந்த உணர்வைப் பிறரும் உணரும்படி செய்ய வேண்டும் இதுவே கலையின் செயல் என "டால்ஸ்" குறிப்பிடுகின்றார்**



இவ்வாறான கலை எவ்வாறு இன்றைய சூழலில் காணப்படுகின்றது என்பதனை கள ஆய்வு செய்வதற்காக மன்னார் சென்றபோது பல்வேறு விதமான சுவாரஸ்யமான அனுபவங்களைப் பெற முடிந்தது. ஒரு இந்துவாகிய எனக்கு இஸ்லாமியக் கலாசார பரிமாற்றம் ஒரு புது அனுபவம் என்றே குறிப்பிட்டாக வேண்டும். மன்னார் மாவட்டத்திற்கு உட்பட்ட முசலி என்ற கிராமத்தில் அதிகளவு இஸ்லாமியர்களே வசித்து வருகின்றனர். இங்குக் கோலாட்டம் என்பது அவர்களினுடைய ஒரு பண்பாட்டு அடையாளம் என்றே கூறியாக வேண்டும். எம்மை பொறுத்தவரையில், கோலாட்டம் என்பது இயல்பான கலாசாரம் என்றாலும், அதனை ஆண்கள் குறிப்பாக இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை நிகழ்த்துதல் என்பது சுவாரஸ்யமான விடயம் அல்லவா எனக்கும் அப்படிதான்.

இது தொடர்பாக முசலி கிராமத்தில் உள்ள 67 வயதை உடைய விவசாயியான கோலாட்டத்தில் மிகுந்த ஈடுபாட்டினையும் அதனை தற்போதுள்ள இளம் சந்ததியினருக்குப் பயிற்றுவிக்கின்ற எஸ். எல். எம் அப்துல் காதர் என்பவரைச் சந்தித்து நேர்காணல் செய்ததன் வாயிலாக என்னால் பல புதிய சுவாரஸ்யமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அதனை உங்களிடமும் பகிர்ந்து கொள்கின்றேன்.



**கேள்வி: மன்னாரை பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் இருந்தே கோலாட்டம் இடம்பெற்று வருகின்றது. அது தொடர்பான உங்கள் கருத்து**

மன்னார் மாவட்டத்தில் உள்ள எங்களது கிராமமான முசலியினை பொறுத்தவரையில் கோலாட்டம் என்பது எங்களுடைய பண்பாட்டு அடையாளம். இதனை எங்களது கிராமத்தில் களிகம்பு என அழைப்பர். பெரும்பாலும் பெண்கள் வண்ணங்களால் தீட்டப்பட்ட தடிகளைக் கொண்டு ஆடும் கலையைக் கோலாட்டம் என்றனர். கதிர்களிலிருந்து தானியங்களைப் பிரித்து எடுக்கவும் புளியம் பழத்தின் ஓடுகளை உடைக்கவும் பனம் பழங்களிலே பாணி கறக்கவும் பெண்கள் தொழில் முறை சார்ந்து பயன்படுத்தப்பட்ட கருவியே பின்னர் ஆடலுக்குரிய கோலாட்டம் ஆகிவிட்டது. பெண்கள் தமது கோள்களைத் தாமே மோதி சத்தம் ஏற்படுத்துவதைச் சரவை என்றும் பக்கவாட்டில் மோதுதல் பக்க சரவை என்றும் கைகளை உயர்த்தி மோதுதல் மேற்சரவை என்றும் அழைத்தனர். இப்படியான கலைக்கு ஆண்கள் பெரும்பாலும் ஒரு கிளையையே பயன்படுத்துவர். முசலியினை பொறுத்தவரையில் ஏதாவது திருமணமோ அல்லது விசேட நிகழ்வாகப் பண்டிகையாக இருந்தாலும், காலம் காலமாகக் கோலாட்டம் ஆடும் மரபே இன்று வரையும் காணப்பட்டு வருகின்றது. ஆனாலும் ஆரம்பத்திலிருந்தது போன்று பெரியவர்களே இன்றும் ஆடும் தன்மை காணப்படுகின்றது என்றார்.

**கேள்வி: கோலாட்டம் ஆடுவதற்கான தடியினை எவ்வாறு பெறுகின்றீர்கள்**

எமது கிராமத்தினை பொறுத்தவரையில் களிகம்பு என்பது சந்தோசமாக ஆடப்படும் ஒரு கலை. களிப்பு என்பது காட்சி கண்டு களித்தல் என்று பொருள்கொள்ளப்படுகின்றது. இதில் பயன்படுத்தப்படும் தடியானது தரணி, சாயா, சிலந்தி என்ற மரங்களால் எடுக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேல் வெயிலில் உலர வைத்த பின்னரே எடுத்து ஆடப்படுகின்றது. இதன் மூலம் அந்த தடிகளில் அதிக ஒளி எழுப்பப்படுவதனை அவதானிக்கலாம்.

**கேள்வி: முசிலி கிராமத்தில் ஆண்கள் ஆடும் கோலாட்டம் நிகழ்த்தப்படும் முறை எவ்வாறானது**

கோலாட்டமானது, 24 அடி 8 அடி 4 அடி கொண்டதாக அமைவதோடு, மல்லி, கிறுவை, தாளம் என வரிசை கிரமமாக பாடப்படும் போது இதில் காணப்படும் உறுப்பினர்கள் எட்டாக கணக்கிடப்பட்டு உள்ளே நான்கு பேரும் வெளியே நான்கு பேரும் மாறி மாறி ஆடுவர். இத்தகைய கோலாட்டமானது சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக ஆடப்பட்டு வருவதாகவும் இதில் ஆடப்படும் தன்மையானது உள்ளே வெளியே என்ற சுழற்சி முறையில் ஆடப்படுவதனால் அதிக பயிற்சியினை பெற்ற பின்னரே ஆட முடியும். இதில் ஆடுபவரின் கவனம் சிறிது சிதைந்தாலோ அல்லது திசை மாற்றப் பட்டாலோ அது ஆபத்தை உருவாக்கும்.

**கோலாட்டம் எத்தனை வகைப்படும்? அது தொடர்பாக கூறுங்கள்**

கோலாட்டமானது பின்னல் கோலாட்டம், கோலாட்டம், கும்மி கோலாட்டம் என்று மூன்று வகைப்படும். இதில் பின்னல் கோலாட்டம் என்பது வட்டமான கட்டையின் ஒரு துளை சுற்றி சுமார் 10 அல்லது 12 துளைகள் போடப்பட்டிருக்கும். அதில் ஒவ்வொரு துளையிலும் நீண்ட மணியன் கயிறு என்ற மெல்லிய உறுதியான கயிறு சேர்க்கப்பட்டு தோரணையாகத் தொங்கவிடப்பட்டிருக்கும். அந்த கட்டையைக் கொக்கி மூலம் மரத்தின் கிளையில் கட்டி தொங்கவிட்ட ஒவ்வொரு கயிற்றினையும் பிடித்து 10 பேர் முன்னும் பின்னுமாக ஆடுவர்.

கும்மி கோலாட்டம் என்கையில் பெண்கள் கருவில் விளக்கு அல்லது முளைப்பாரி வைத்து வட்டமாக அதனைச் சுற்றி கோள்களை வைத்து ஆடுவதாகும்.

**கேள்வி: நீங்கள் எவ்வாறான களிகம்பு பாடல்களை பாடுவீர்கள்**

முசலி கிராமத்தினை பொறுத்தவரையில், கோலாட்டம் ஆட பாடப்படும் பாடல்களினை சிந்து பாடல்கள் என அழைப்பர். இதில் பயன்படுத்தப்படும் நான்கு வரிகளும், "தன்னானே… தன்னானே" என அடிகள் மீண்டும் மீண்டும் வருவதாகக் காணப்படுகிறது. இப்பாடல்கள் இஸ்லாமியப் புலவர்கள் பாடப்பட்டது. கோலாட்டமானது கல்யாண வீடு, பூப்புனித நீராட்டு விழா, கலை விழா, பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்ற இடங்களில் அதிகளவாகப் பாடப்பட்டு வருகின்றது. அதாவது, "சேனல் விளையும் செழிப்பையும் பாரடி செம்பெறி தான தேசம் அற்புதமான தடி நந்தவனமும் நல்வாவியும் தோணுது நாடி நடக்க நடுமடை காணுது" என்று பலவாரெல்லாம் பாடல்கள் உள்ளது. இதனை நாங்களே பாடிக்கொண்டு ஆடுவோம். நானும் என்னுடைய முன்னோர்களிடமிருந்து பல பாடல்களை கற்று இன்று பாடியிருக்கின்றேன்.

தற்போது முசலியில் கோலாட்டத்தின் சமூக மதிப்பீடு உங்கள் பார்வையில் எவ்வாறு உள்ளது? உலகிலேயே நாட்டார் கலைகள் மீதான ஈடுபாடு கேள்விக்குறியாகவே உள்ளது கோலாட்டமானது எமது கிராமத்தில் காலம் காலமாக ஆடப்பட்டு வந்தாலும் எமது பிரதேசம் வன்னியின் கீழ்க் காணப்படுவதால் 25 வருடங்களுக்கு முன்னதாக நடைபெற்ற போரின் நிமித்தம் அதிகளவு இடம்பெயர்தல் ஏற்பட்டதனால் இக்கோலாட்டமானது மக்களிடையே பயில் நிலையில் இல்லாமல் அருகி வருகின்ற சூழ்நிலையே காணப்படுகின்றது. வேலைப்பளு காரணமாக இளைஞர்களிடையே பரவிச் செல்ல வாய்ப்பு இல்லாமலும் உள்ளது என்றே குறிப்பிட்டாக வேண்டும்.

**கேள்வி: நீங்கள் தற்போது கோலாட்டத்தினை பயிற்றுவிப்பதில் எதிர்நோக்கும் சவால்கள் உள்ளதா ?**

நிச்சயமாக இன்றைய தொழில்நுட்ப உலகில் உள்ள இளைஞர்கள் எல்லாமே தொழில் நிமித்தமாக ஓடித் திரியும் தன்மையே அதிகளவு காணப்படுகின்றது.

இதனால் இன்றைய இளைஞர்கள் கலையினை பாதுகாக்க வேண்டும் என்று முன்வரும் தன்மை மிகக் குறைவாக உள்ளது. அதுமட்டுமல்லாமல், ஆரம்பக் காலங்களில் பண்டிகையாகக் காணப்பட்ட இக்கோலாட்டமானது இன்று சினிமாவின் தாக்கத்தினால் வலுவிழந்து செல்கின்ற சூழலே அதிகமாகக் காணப்படுகின்றது.

கோலாட்டத்தினை பாதுகாக்க தாங்கள் கையாளுகின்ற வழிமுறைகள் இன்று நாங்கள் தான் கோலாட்டத்தினை ஆடிவருகின்றோம் எதிர்காலத்திலும் கோலாட்டமானது தொடர்ந்தும் ஆடப்பட வேண்டும் என கருதி எங்களுடைய பள்ளியின் மூலமாகக் கல்வி பயில்கின்ற சிறார்களுக்கு எப்படி தொழுகைக்கான வகுப்புகள் நடத்தப்படுகின்றதோ அதுபோல கோலாட்டத்தினையும் பயில வேண்டும் என முடிவு செய்து சிறார்களுக்குக் கோலாட்டத்தினை கற்பித்து வருகின்றோம். இதன் மூலம் எங்களுடைய அடையாளம் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என நம்புகின்றோம்.

உண்மையில் கோலாட்டம் என்பது எங்களுடைய பண்பாட்டு அடையாளம் அதனை என்றும் பாதுகாக்க வேண்டும் இதுவே எனது ஆசை மற்றும் எதிர்பார்ப்பு எதிர்காலம் இனி உங்கள் கையில்…

# உலக அணு ஆயுத ஒழிப்பு தினம்

## ஒரு விழிப்புணர்வு பதிவு



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி



**ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமான அன்டோனியோ குட்டெரெஸ் அணுவாயுத ஒழிப்பு சம்பந்தமாகக் குறிப்பிடும் பொழுது "அணுவாயுத ஒழிப்பு மற்றும் அணுவாயுத பரவல் தடை ஆகியவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒன்றின் முன்னேற்றமானது மற்றொன்றின் முன்னேற்றத்தைத் தூண்டுகிறது. அரசாங்கங்கள் இரண்டையும் அவசரமாகப் பின்பற்ற வேண்டும்" என்று குறிப்பிடுகின்றார்.**

உலக நாடுகளிடையே அதிகரித்து வருகின்ற அரசியல் சார்ந்த பிரிவுகளும், நாடுகளிடையே நிலவும் மேலாதிக்க மனப்பான்மையும், உலக நாடுகள் இடையே நம்பிக்கையின்மையை அதிகரித்து வருகின்றது.


அணுவாயுதங்கள் அபாயகரமானவைகள். விபத்தாலோ, தவறான கணிப்பீட்டினாலோ அல்லது ஏதாவது ஒரு நோக்கத்தின் மூலமாக ஏற்படுகின்ற விளைவானது மிகப் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி விடும்.

கண் மூடித் திறப்பதற்குள் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கும் தன்மை கொண்டவைகள் அணுவாயுதங்கள்.

இயற்கையின் சீற்றமான நிலநடுக்கம் காட்டுத்தீ, வெள்ள அபாயம், போன்றவற்றால் வரும் அழிவை விடப் போரின் காரணமாக ஏற்படும் செயற்கை அழிவில் மனித குலம் நிலை குலைந்து போகின்றது .

1986ஆம் ஆண்டு அன்றைய சோவியத் யூனியனில் ஒரு பகுதியாகக் காணப்பட்ட செர்னோபில் நகரம் (இன்றைய யுக்ரேன் நகரில் உள்ளது) அணு உலை வெடித்ததில் நூற்றுக்குக் குறைவானவர்களே உயிர் இழந்ததாகக் கணக்கிடப்பட்டிருந்தாலும், அதிலிருந்து வெளிவந்த கதிரியக்கம் பரவிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்களில் பலரும் புற்றுநோய் உபாதைக்கு உள்ளாகி உள்ளார்களென அறிய முடிகின்றது.

2011ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியானது ஜப்பான் தேசத்தில் உள்ள புகுசிமா அணு உலையினைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியது. இதிலிருந்து வெளியேறத் தொடங்கிய கதிர்வீச்சின் காரணமாக, சுமார் ஒரு லட்சம் பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டதுடன், கடல் வாழ் உயிரினங்களில் பெருமளவானவை பாதிக்கப்பட்டும் இருந்தன. அணுக்குண்டு வீச்சினாலும், அணுக்கதிர் கசிவினாலும் ஏற்பட்ட பாதிப்புகளின் விளைவுகளை இதன் மூலம் அறிய முடிகின்றது.




1989ஆம் ஆண்டு வரலாற்றுப் புகழ் மிக்க ஆண்டாகும் . அன்றைய ஆண்டே கிழக்கு ஜேர்மனிக்கும், மேற்கு ஜேர்மனிக்கும் இடையில் காணப்பட்ட பெர்லின் சுவர் துவம்சம் செய்யப்பட்ட ஆண்டாகும்.

கிழக்கு ஜேர்மனியையும், மேற்கு ஜேர்மனியையும், ஒன்றிணைத்த வரலாற்று நிகழ்வு அது. எனது ஜேர்மனி தேசத்துப் பயணத்தின் பொழுது இந்த சுவரின் எச்ச சொச்சங்களைப் பார்த்த ஒரு கணம் அதிர்ச்சி அடைந்து விட்டேன். பனிப் போர்க் காலக் கட்டத்தில் வாழ்ந்த இரு நாட்டு மக்களின் கதைகளைக் கேட்ட பொழுது துயரமே மேலிட்டது.

பேர்லின் சுவர் அழிக்கப்பட்டு, ஒன்றிணைந்த அந்நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பார்த்த பொழுது உலகமே சமாதானத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்து விட்டது போன்றதொரு உணர்வு என்னுள் ஏற்பட்டது. ஆனால், உலக நாடுகளில் தற்போது நிகழும் நிகழ்வுகளைப் பார்க்கின்ற பொழுது சமாதானக் காற்றுக்கு இடமில்லாமலேயே போய் விடுமோ என்றதொரு தோற்றப்பாடு என்னுள் எழுவதில் நியாயம் இருக்கத் தானே செய்கின்றது.

மொத்த அணுவாயுத அழிப்பு என்பது ஒரு கனவு அல்ல, அது ஒரு தேவைப்பாடு, யுத்தமா - சமாதானமா, வாழ்வா- சாவா என்ற நிலைமையை மனித குலத்துக்கு ஏற்படுத்தும் தன்மையைக் கொண்டது அணுவாயுதங்கள்.

அணுவாயுதத்தை தன்னகத்தே கொண்டுள்ள பல நாடுகள் அதனை முழுமையாக அழிப்பதற்கு எத்தகைய முயற்சிகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் அணுவாயுதமற்ற நாடுகள், அணுவாயுதத்தைக் கொண்டுள்ள நாடுகள் மீதான நம்பகத் தன்மையினை படிப்படியாக இழந்து வருவதனைக் காணலாம்.

ரஷ்யா- உக்ரைன் யுத்தத்தினைத் தொடர்ந்து, ரஷ்ய அதிபர் விலாதிமிர் புட்டின் கூறும் பொழுது "தனது நாட்டு நிலப்பரப்பைக் காப்பாற்றுவதற்காக தந்திரோபாய அணுக்கரு ஆயுதத்தைப் பயன்படுத்த தமது நாடு தயாராக இருப்பதாக" ஒரு எச்சரிக்கையினை 2022ஆம் ஆண்டு விடுத்திருந்தனை இத்தருணத்தில் நினைவு கூறுவது அவசியம் !

இவர் உக்ரைனுக்கு எதிராக இவ்வாறான ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்ற அச்ச உணர்வு ஏற்படுகின்றது.

"அவ்வாறு ரஷ்யா அணுக் கருவைப் பயன்படுத்தினால் அது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடக்கும் மிக ஆபத்தான போர்ப் பதற்ற அதிகரிப்பாக அமைந்து விடும் "என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் அன்று அதற்கு பதிலடிக் கொடுத்திருந்தார்.

தந்திரோபாய அணுக்கரு ஆயுதங்கள் என்பவை சிறிய அணு ஆயுதங்கள். மற்றும் அவற்றை சிறியளவில் போர்க்களத்தில் பயன்படுத்துவதற்கான ஏவும் அமைப்பைக் குறிப்பதாகும். அமெரிக்க உளவுத்துறையின் படி, ரஷ்யாவில் சுமார் 2000 தந்திரோபாய அணு ஆயுதங்கள் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அணுகுண்டு தாக்குதலின் விளைவாக, பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன், பெருமளவான சொத்துக்களும், அளவுக்கதிகமான ஜீவராசிகளும் அழிந்ததாகவும், அனேகமானோர் தமது அவயங்களை இழந்தும் காணப்பட்டதாக எனது முன்னைய பதிவுகளில் குறிப்பிட்டு இருந்தேன்.

இரண்டாம் உலகப்போரில் மேற்கொள்ளப்பட்ட அணுகுண்டுகளின் கோரத்தை உலகம் பார்த்து அதிர்ந்தது, ஜப்பானின் இரண்டு நகரங்களில் ஏற்பட்ட பேரழிவுகளின் காரணமாக, உலக நாடுகள் அணு ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக அக்கறை செலுத்த ஆரம்பித்தன.

இவ்வாறான அழிவு நடந்த 23 ஆண்டுகளுக்குப் பிறகு, 1968ஆம் ஆண்டு அணு ஆயுதப் பரவல் தடை தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்துக்காக முன் வைக்கப்பட்டது. ஆனால் , மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகே, அந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

சுமார் 191 நாடுகள் இதில் கையெழுத்திட்டிருந்தன.

இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் பல்வேறுபட்டதாக இருந்தாலும், அணு ஆயுதப் பரவலைத் தடை செய்வது, அமைதி நோக்கங்களுக்கான அணு ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு வழங்குவது, முற்றிலுமாக அணு ஆயுதங்களை ஒழிப்பது போன்றவை முக்கிய அம்சங்களாக இருந்தன.

2013 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் எடுக்கப்பட்ட 68/32 ஆம் இலக்கத் தீர்மானத்தின்படி, செப்டெம்பர் 26ஆம் திகதி 'சர்வதேச அணு ஆயுத ஒழிப்பு தினமாக' பிரகடனப்படுத்தப்பட்டது.

உலக அளவில் அணுசக்தி ஆயுதங்களைக் குறைப்பதே மிக முக்கியமானது என்பதை உணர்த்தும் வகையில் இந்த நாள் ஒவ்வொரு வருடமும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த நாளின் குறிக்கோள் அணு ஆயுதங்களால் மனிதகுலத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் அவற்றை முற்றிலுமாக அகற்றுவதற்கான அவசியம் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

இன்று உலகில் சுமார் 13,400 அணு ஆயுதங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு வைத்திருக்கின்ற நாடுகள் பெருமளவான பணத்தினை செலவு செய்து அவற்றை நவீனமயப்படுத்தியும் வருகின்றன.

தமது நாடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இன்று பல நாடுகள் அணு ஆயுத உற்பத்தியினை மேற்கொள்ள எத்தனிக்கின்றன.

கடந்த ஓராண்டில் உலக நாடுகளின் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை சுமார் 13 சதவீதத்தால் அதிகரித்துள்ளது . கடந்த வருடம் மட்டும் உலக நாடுகள் சுமார் 91 .3 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளன. இதில் இந்தியாவின் பங்களிப்பானது 2.7 பில்லியன் டொலர்களாக காணப்படுகின்றது. அமெரிக்கா 51.5 பில்லியன் டாலர்களையும், சீனா 11.9 பில்லியன் அமெரிக்க டாலர்களையும் அணு ஆயுதத்திற்காகச் செலவிட்டுள்ளன.

மத்திய கிழக்கில் இஸ்ரேலிடம் மாத்திரம் அணு ஆயுதங்கள் இருக்கின்ற பொழுது, தற்பொழுது ஈரானும் அணு ஆயுத உற்பத்தியினை மேற்கொண்டிருப்பதாக செய்திகள் குறிப்பிடுகின்றன.

எமது பிராந்தியத்தில் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் அணு ஆயுதத்தை வைத்திருக்கின்றன. இவ்வாறான ஆயுதங்கள் நல்ல செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டால், அவை வரவேற்கத்தக்கதே !

மாறாக, நாடுகளுக்கு இடையில் காணப்படுகின்ற போட்டி, தானென்ற செருக்கு, ஆணவம் ஆகியவற்றின் காரணமாக அவைகள் பயன்படுத்தப்படுமாக இருந்தால், நிச்சயமாக அது உலக அழிவிற்கு வித்திடும்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இஸ்ரேல் - லெபனான் , காசா யுத்தங்கள் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஒரு பெரும் போர் சூழலை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த யுத்தம் பரவலாக்கப்படுகின்ற பொழுது, மத்திய கிழக்கு நாடுகளில் பெரும் பாதிப்பு ஏற்படுமெனக் கருத இடமுண்டு. அவ்வாறான பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில், உலக நாடுகளின் கச்சா எண்ணெய் விலையில் உயர்வு ஏற்படும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலிருந்து தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளில் கடமையாற்றுகின்ற பணியாட்கள் தொழில் வாய்ப்பை இழக்க நேரிடும். இதனால் மூன்றாம் உலக நாடுகள் அந்நிய செலாவணி பிரச்சினையை எதிர் நோக்க இடமுண்டு.

இதுபோல ரஷ்யா - யுக்ரேயின் யுத்தம், சர்வாதிகார ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தியானது கொரியத் தீபகற்பத்தில் மாத்திரம் அல்லாது, அதனை அண்டிய பிரதேசங்களிலும் பாதிப்பினை ஏற்படுத்தலாம்.

எனவே, எதிர்பார்க்கப்படும் இவ்வாறான அணு ஆயுத அழிவிலிருந்து உலகைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உலகத் தலைவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் இருக்கின்றது.

எனவே, ஒவ்வொரு நாட்டுப் பிரஜையும், தத்தமது நாட்டு அரசாங்கங்களை வலியுறுத்துவதன் மூலமாக அணு ஆயுத உற்பத்தியினை தடை செய்ய முயற்சிக்கலாம்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத் தொடரை ஒட்டி, 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் நடைபெற்ற உயர்மட்ட விழாவில் இலங்கை அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஒப்பந்தத்தில் இணைவதற்கான ஆவணத்தை கையளித்தது.

இதன்படி, இந்த ஒப்பந்தத்தில் இணைந்துள்ள 69 ஆவது நாடாக இலங்கை உள்ளடங்குகின்றது.

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஒப்பந்தத்தின் பேச்சுவார்த்தைகளில் இலங்கை பங்கேற்றதுடன், அதை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவாக வாக்களித்த 122 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான உடன்படிக்கையை இலங்கை அங்கீகரிப்பதானது, சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்கு ஆதரவாக அணு ஆயுதக் குறைப்புக்கான தனது நீண்டகால உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

இந்த சூழலில், இலங்கையும் 2023 ஜூலை 25ஆம் திகதி விரிவான அணுசக்தி பரிசோதனை தடை ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற இயற்பியலாளர் 'ஸ்டீபன் ஹாவ்க்கிங்ஸ்' தான் மரணிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு விடயம் யாதெனில் ,

" இவ்வுலகம் மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியுள்ள நிலப்பரப்பாக இன்னும் 100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்காது என்றும் , அதற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடுகிறார்.

(1) அணு ஆயுதங்கள்,

(2) காலநிலை மாற்றம்,

(3) எரிகற்கள்.

எரிக்கற்களை பற்றி நாம் எதுவும் செய்யமுடியாது,

மற்ற இரண்டிற்கும் மானுட சமூகமே பொறுப்பேற்கவேண்டும், அதுவும் குறிப்பாக அணு ஆயுதங்கள் தொடர்பில் அதிகூடிய கவனம் எடுக்க வேண்டும்.

"மூன்றாம் உலகப்போர் எந்த ஆயுதத்தைக் கொண்டு நடைபெறும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், நான்காம் உலகப் போர் கற்களையும் தடிகளையும் கொண்டே நடைபெறும்" என்கின்றார் புகழ்பெற்ற அறிவியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் .

இன்று உலக நாடுகள் பாரியப் பொருளாதார நெருக்கடியினை சந்தித்து வருகின்றன.

பசி , பட்டினி, வறுமை, போசாக்கின்மை போன்றவைகள் இன்று உலகில் தலை விரித்து ஆடுகின்றன. இன்று அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகள் செல்வந்த நாடுகளாகவும், நீண்ட காலத் திட்டங்களை தன்னகத்தே கொண்டு தத்தமது அணு ஆயுதங்களை நவீன மயப்படுத்த முற்படுவதாகவும் அறிய முடிகின்றது .

அணு ஆயுத உற்பத்திக்காக மேற்கொள்ளப்படுகின்ற பணத்தினை உலகில் காணப்படுகின்ற வறுமையை நீக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டால் , ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பது உண்மை. அணு ஆயுதமற்ற, அமைதியான உலகைச் சிருஷ்டிக்க அனைவரது பங்களிப்பும் அவசியம். இந்த கருத்துடன் இந்த நாளை இனிதே ஆரம்பிப்போம்.



# சவால் மிக்க புதிய களம்



சொக்கலிங்கம் லோஜினி
ஊடக கற்கைகள் துறை
மூன்றாம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்

'அதிகாரம்' என்பது வழங்கப்படுவதும் பறிக்கப்படுவதும் ஆண்டவனின் நாட்டமே... நடந்து முடிந்த தேர்தல் நம் எல்லோருக்கும் ஒரு புதிய செய்தியை உணர்த்தி நிற்கின்றது. மரபு ரீதியான அரசியல் கட்சிகள் இரண்டும் நிராகரிக்கப்பட்டு 1965 ஆம் ஆண்டில் தோற்றம் பெற்று புரட்சிகரமான கொள்கையுடன் பயணித்து இரண்டு மகா புரட்சிகளைக் கண்ட மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தனது ஸ்தாபக தலைவனையும் பலி கொடுத்து தன் மீது பக்தி கொண்ட சுமார் 60 ஆயிரம் இளைஞர் யுவதிகளையும் பலி கொடுத்து இரண்டு முறை அரசியல் ரீதியாக தடை செய்யப்பட்ட நிலையில் மீண்டு வந்து ஜனநாயக நடைமுறை அரசியலுக்குள் பிரவேசம் கொண்ட கட்சியாகி 'தேசிய மக்கள் சக்தி' எனும் பேரணிக்கு தலைமைத்துவம் கொடுத்து நாற்பத்தி ஒன்பது வருடங்களின் பின்னர் தனது தலைவனை நிறைவேற்று அதிகாரக் கதிரையில் அமர்த்தியுள்ள தருணம் இது.

ஜேவிபி எனும் மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபக தலைவர் ரோஹண விஜேவீர 'நான் இல்லை என்றாலும் இந்த தேசத்தில் அரசியல் என்றாலே கசந்துபோய் இருக்கும் ஒரு தருணம் வரும். அப்போது எனது ஜேவிபி சகோதரர் ஒருவர் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவார். ஆனால் அவர் பிறப்பில் செல்வந்தராகவோ, பணக்காரராகவோ இருக்க மாட்டார்'. ரோஹண விஜேவீர என்ற தலைவனின் அன்றைய தீர்க்கதரிசனமிக்க கருத்துக்கள் இன்று உண்மையாகி நிற்கின்றன.

2000 ஆம் ஆண்டு உருவான அரசியல் பிரவேசத்துடன் 24 வருட கால பயணத்தில் தனது இலக்கை இன்று அடைந்துள்ளது. அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் கடந்த காலங்களில் பெரும் கூட்டணிகள் அமைத்து அதிக எண்ணிக்கையில் கட்சிகளின் தலைவர்களின் துணையுடனும் பாரிய பொருளாதார வளங்களுடனும் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுப்பது வழக்கமாகும். இம்முறையும் அதுவே நடந்தேறியது.

கடந்த 2019 ஜனாதிபதி தேர்தலில் சுமார் நான்கு லட்சம் வாக்குகளை மட்டுமே பெற்ற ஒருவர் நாற்பதுக்கும் அதிகமான லட்ச வாக்குகளை பெறுவது சாத்தியமே இல்லை என்று போடப்பட்ட தப்புக் கணக்குகளை தகர்த்தெறிந்து 5,740,179 வாக்குகளை பெற்று, பெற்றுக்கொண்ட வெற்றி வரலாறாக எழுதப்பட்டுள்ளது.

இம்முறை அரசியல் மேடைகளில் பிரதானமாக அவர் வழங்கிய வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக அமல்படுத்துவதில்தான் அவரது அடுத்த ஐந்து வருடத்திற்கான அதிகாரப் பயணம் தங்கி உள்ளது. மக்களின் விருப்பத்தெரிவு சாதிக்குமா...? இல்லையா.....? என்பதை எதிர்காலமே தீர்மானிக்கும்.

தன்னுடன் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றுடன் பயணிக்கும் அதேவேளை நாட்டின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையில் தனக்கு உகந்த ஸ்திரமான ஒரு புதிய பாராளுமன்றத்தை அமைக்கும் தேவை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்காவிற்கு இருக்கிறது. அதன்காரணமாக தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

களங்கமற்ற கறை படியாத புதிய முகங்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டிய நிலை அவர்களின் கொள்கைக்கு அமைய ஏற்படக்கூடும். கடந்த காலங்களில் மக்களுக்கு எதுவுமே செய்ய முடியாமல் பாராளுமன்ற கதிரைகளை சூடாக்கிய அணியின் இறுதிப் பாராளுமன்றமாகவே இது இருக்கலாம்.


கொடுங்கோல் ஆட்சியாளன் கோட்டாபய ராஜபக்சவின் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான 'ஜனாஸா எரிப்பு' என்ற இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளோடு விளையாடிய பழிவாங்கலுக்கு எதிராக தமது எதிர்ப்பை காட்டவோ, குரல் கொடுக்கவோ வக்கில்லாமல் கூஜா தூக்கியதன் மூலம் மனசாட்சியே இன்றி தனது இனத்திற்கே துரோகம் விளைவித்த துரோகிகளின் மீள் அரசியல் பிரவேசத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படலாம். இவர்களை வழிநடத்தி நாடகமாடிய தலைமைகளுக்கும் கூட இது இறுதிப் பாராளுமன்றமாக அமையலாம் அனுர குமார திஸாநாயக்கவின் இந்த இமாலய வெற்றிக்கு இன்னொரு காரணியையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அவருடன் போட்டியிட்ட சுயாதீன வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாச ஆகியோரின் கூட்டணியும் பிரச்சார யுக்திகளுமே ஆகும். ரணில் விக்ரமசிங்க பழமை வாய்ந்த ஆளுமை மிக்க அரசியல் தலைவர், அனுபவசாலி, இக்கட்டான சூழலில் நாட்டை மீட்டெடுத்தவர், சர்வதேச ஆதரவு மிக்கவர் இவ்வாறு ஒரு பக்கம் அவருக்கு நிறைய தகுதிகள் இருந்த போதிலும் ராஜபக்ச அரசின் பங்காளிகள், ஊழல் பேர்வழிகள், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மற்றும் கோட்டாபய அரசின் அமைச்சரவை உறுப்பினர்களை தனது கூட்டணியில் இணைத்துக் கொண்டதும் அவர்களை பிரச்சாரத்திற்கு பயன்படுத்தியதும் ஆகும். இவை மக்கள் மத்தியில் பீதியையும் அவநம்பிக்கையும் அவர் மீது ஏற்படுத்தியது எனலாம்.

மறுபக்கத்தில் கடும் போட்டியாளராக இருந்த ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச கடந்த 2019 ஆம் ஆண்டு தேர்தலில் 55 லட்சம் வாக்குகளை பெற்றிருந்த போதிலும் இம்முறை அவரது வாக்குகள் பதின்மூன்று லட்சங்களால் குறைந்துள்ளன. அவர் மீதான மக்களின் அவநம்பிக்கைக்கு காரணம் அவருடன் இறுதி நேரத்தில் இணைந்து கொண்ட ராஜபக்ச அரசின் பங்காளிகளும் மோசடிக்காரர்களும் ஆகும். இதன் காரணமாக இவருக்கும் இவரது சக போட்டியாளரான ரணில் விக்கிரமசிங்க வுக்கும் இடையில் வித்தியாசம் இல்லாமல் போன நிலைமையே ஏற்பட்டது.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் பிரச்சார யுக்திகளில் இருந்த கவர்ச்சியும், எதிர்ப்பார்ப்பும், வேகமும், விறுவிறுப்பும், காத்திரமான உரைகளும் சாத்தியமான பலனை சஜித், ரணில் இருவருக்கும் கொடுக்கவில்லை என்பது அனுரவின் எழுச்சிக்கும் வெற்றிக்கும் இன்னுமொரு முக்கிய காரணி என்றும் சொல்லலாம்.

இறுதியாக இன்னுமொரு விடையமும் சுட்டிக்காட்டப்படல் அவசியமாகும். ஜனாதிபதி தேர்தலில் அவரது வெற்றி ஊர்ஜிதம் செய்யப்பட்ட போதும் அவர் ஒன்பதாவது ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போதும் கொழும்பிலோ நாட்டின் எந்த பிரதேசத்திலோ ஒரு பட்டாசு வெடித்த சத்தம் கூட கேட்க முடியாத அளவிற்கு அந்த கட்சியினர் குறிப்பாக இளைய தலைமுறை மிக ஒழுக்கமான ஒரு கட்டுக்கோப்பிற்குள் இயங்குவது இலங்கை அரசியல் வரலாற்றில் புதுமை நிறைந்த புதிய மாற்றம் என்று கூறலாம். தனக்கு ஆதரவு வழங்கியர்கள் போன்று ஆதரவு வழங்காத அணியும் இந்த நாட்டு மக்களே. அவர்களையும் அரவணைத்துச் செல்வதுதான் தனது எதிர்கால புதிய பாதை என்பதை ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தனது பதவிப்பிரமாணம் இடம்பெற்றதைத் தொடர்ந்து நிகழ்த்திய முதலாவது உரையில் தெளிவாக குறிப்பிட்டமை ஓர் ஆரோக்கியமான செய்தியாகும்.



# "மாற்றங்களை மேற்கொள்வோம்"

இந்த வெற்றிக்காக எமக்கு முன்னரும், எங்களுடனும் பலவிதமான தியாகங்களைச் செய்த, சில சமயங்களில் தங்கள் உயிரைக்கூட தியாகம் செய்த பல தலைமுறைகளின் விலைமதிப்பற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரையும் நாங்கள் மரியாதையுடன் நினைவுகூருகிறோம். இந்த வெற்றியையும், அதன் மூலம் கட்டியெழுப்பப்படும் வளமான நாட்டையும் அவர்களுக்கு அளிக்கும் கௌரவமாகவே நான் கருதுகிறேன்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான பங்கை கூட்டுசெயற்பாடாக நிறைவேற்றும் திறன் எமக்கு உள்ளது. அதற்கான மிகத் திறமையான குழு எங்களிடம் உள்ளது. நம் அனைவருக்கும் அது குறித்த முழுமையான உறுதிப்பாடு உள்ளது. நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த எத்தகைய மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு முன்னதாக பொருளாதாரத்தை நிரந்தரமான நிலைக்கு உயர்த்துவது அவசியம் என நாம் நம்புகிறோம்.

அதற்காக நீண்டகால மத்திய கால திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர், பின்பற்ற வேண்டிய துரித பொருளாதார செயற்பாடுகளின் ஊடாக குறுங்கால ஸ்தீரநிலையை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம்.

நாம் எதிர்பார்க்கும் மாற்றத்திற்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவை அனைத்தும் தற்போதைய பொருளாதாரத்தில் ஸ்தீர நிலையையும் நம்பிக்கையும் கட்டியெழுப்புவதில் மாத்திரமே தங்கியுள்ளது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் துரிதமாக பேச்சுவார்த்தை ஆரம்பித்து நீடிக்கப்பட்ட கடன் வசதியுடன் தொடர்புள்ள விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, சம்பந்தப்பட்ட கடன் தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அது தொடர்பான பணிகளை விரைவில் நிறைவு செய்து, உரிய கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதற்கு இந்த நாட்டு மக்களைப் போலவே சர்வதேச சமூகத்தினதும் ஆதரவையும் பெற முடியும் என நம்புகிறோம். அந்த ஒத்துழைப்பின் மூலம் இந்த கூட்டு முயற்சியில் வெற்றி பெற முடியும் என எதிர்பார்க்கிறோம்.

எமக்கு அதிகாரத்தை கையளிக்கையில் 'மாற்றம்' ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக் கருவே மக்களிடத்தில் ஆழமாக பதிந்திருந்தது. மாற்றம் என எமது நாட்டு மக்கள் கருதுவது அரசியல் முறைமையில் காணப்படும் அனைத்துவிதமான மோசமான பண்புகளை மாற்றுவதையாகும். தற்போது அது நிரூபனமாகியுள்ளது. இந்த நாட்டில் நடைபெற்ற அனைத்துவிதமான தேர்தல்களையும் நோக்கினால், தேர்தலுக்குப் பின்னரான எந்த வன்முறைச் சம்பவமும் நடைபெறாத ஒரேயொரு தேர்தலாக நாம் வெற்றியீட்டிய ஜனாதிபதித் தேர்தலாக வரலாற்றில் இணைக்க முடிந்துள்ளது.

இது நமது நாட்டு மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இந்த நிலைமையை உறுதிப்படுத்தி நிலைப்படுத்துவது எமது நோக்கமாகும். அரசியலில் அதிகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்காக வியூகம் அமைப்பதற்கும் எவருக்கும் உரிமையுள்ளது. அரசியல் செய்யும் நேரத்தில் அரசியல் செய்வதற்கும், நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரத்தில் அதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் இந்த தருணத்தில் வலியுறுத்துகிறேன். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குகிறோம்.

சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பேர்கராக இருந்தாலும், மலேயராக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் "நாம் இலங்கைப் பிரஜைகள்" என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதற்காக அரசியலமைப்பு ரீதியான,பொருளாதார.அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒரு போதும் நாம் பின்வாங்க மாட்டோம்.

தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத்தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந்நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

இந்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்காக அவற்றை செயல்படுத்த அவசியமான செயற்திறன்மிக்க மற்றும் நேர்மையான அதிகாரிகளை நியமிக்கும் பல நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கனவே நிறைவு செய்துள்ளோம். பொதுப் பணிக்கு இடையூறு ஏற்படாத மற்றும் பிரஜைகள் தொடர்பில் பாதகமான அழுத்தங்கள் ஏற்படாத வகையில் , எதிர்பார்த்த மாற்றங்கள் படிப்படியாக மேற்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்.

சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்கவும், ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்கவும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அனைத்து பிரஜைகளினதும் சமூக பாதுகாப்பை உறுதி செய்வோம்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற எண்ணக்கருவை மீள உயிர்ப்பிப்போம்.

எமது நாட்டை கட்டியெழுப்புகையில் அரச சேவைக்கு பாரிய பங்கு இருக்கிறது என்பதை நம்புகிறோம்.

பொது மக்களை கண்ணியமாக நடத்தும் அரசாங்கத்தின் இலக்குகளை நோக்கிச் செல்லும் அரச சேவையை உருவாக்குவோம். செயற்திறன் மிக்க, நேர்மையான மற்றும் ஜனரஞ்சகமான அரச சேவையை உருவாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு. அதற்கான நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டம் எங்களிடம் உள்ளது.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள அதிக வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தாய்க்கும் தந்தைக்கும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படும் நிலை ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

தமது பிள்ளைக்கு நல்ல பாடசாலை மற்றும் சிறந்த கல்வியை வழங்க அந்த ஒவ்வொரு பெற்றோருக்கும் உரிமை உண்டு. அனைத்து பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை வழங்கவும், அடுத்த தலைமுறையை பாதுகாக்கவும் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அறிவு,திறன்,மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தி இளைஞர் சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்படக் கூடிய எதிர்காலத்தை உருவாக்குவோம். எந்த நாட்டிற்கு நாம் சென்றாலும், விமான நிலையத்தின் தன்மையை வைத்து அந்த நாடு குறித்து ஒரு கண்ணோட்டத்தை உருவாக்க முடியும். அதன் ஒழுங்கு, மக்களின் நடத்தை,செயல்பாடு, போன்றவற்றின் மூலமும் மறைமுகமாக அந்த நாட்டின் இயல்பு எடுத்துக் காட்டப்படுகின்றது.

அதையும் தாண்டி சுற்றுச்சூழலின் தூய்மை, வீதிகளில் வாகனங்கள் செல்லும் விதம், முதியோர்களை நடத்தும் விதம், விருந்தோம்பல் செய்யும் முறை, விலங்குகள் எப்படி நடத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்த முடியும். நம் நாட்டின் பிம்பத்தை அதே வகையில் தெளிவாக தெரியும் வகையில் கட்டியெழுப்ப நாம் திட்டங்களை தயாரித்து முடித்துள்ளோம். அந்த உருவாக்கத்திற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நாட்டின் கடவுச்சீட்டை உலகமே மதிக்கும் நிலைக்கு, நாம் நாட்டை கட்டியெழுப்புவது அவசியம். இந்த நாட்டின் பிரஜைகளுக்கு 'நான் இலங்கையர்' என்று பெருமையுடன் கூறக்கூடிய நாட்டை உருவாக்குவது அவசியம். இந்த நாட்டின் பிரஜையாக இருப்பது பெருமை என்று நம் நாட்டு மக்கள் உணரும் வகையில் இந்த நாட்டை உருவாக்குவது அவசியம். அதற்கு உங்களின் கூட்டுப் பங்களிப்பு தேவை.

அனைத்து பிரஜைகளுக்கும் சமூக நீதியை நிறைவேற்றும் அரசொன்றை உருவாக்க நாம் பொறுப்புடன் பங்களிக்கிறோம். அறிவு, திறன்கள், கல்வி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை

ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தின் மூலம் எமது சிறுவர்கள் மற்றும் இளைஞர் சந்ததிக்கு நம்பகமான எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்புவோம்.

நமது நாட்டின் சனத்தொகையில் ஐம்பத்திரண்டு வீதத்தைத் தாண்டிய பெண்கள் சமூகம், இந்நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகச் செயல்பாட்டிற்கு பெரும் பங்களிப்பைச் செய்யும் குழுவாகும். பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பாக அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நாம் செல்வோம்.

சகல நிறுவனங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை பலப்படுத்துவதற்கு நாம் செயற்படுவோம்.

அதற்கான எமது அர்ப்பணிப்பின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்தும் வகையில் ஏற்கெனவே எமது பிரதமர் பதவிக்கு பெண் ஒருவரை நியமித்துள்ளோம். எமது சனத்தொகையில் பெருந்தொகையானோர் ஊனமுற்று விசேட சமூக பாதுகாப்பு கிடைக்க வேண்டியவர்களாகும். அவர்களுக்காக பலமான சமூக பாதுகாப்பு கட்டமைப்பொன்றை நாம் திட்டமிட்டுள்ளதோடு அதன் குறுங்கால நடவடிக்கையை விரைவாக ஆரம்பிப்போம்.

நாம் செல்லும் பயணத்தில் சமூக கட்டமைப்பின் எந்தவொரு பகுதியையும் கைவிடப்போவதில்லை என்பதற்கு நாம் பொறுப்பு கூறுகிறோம். ஒவ்வொருவரினதும் தனித்துவத்திற்கு மதிப்பளித்து அவற்றை நாட்டின் முன்னேற்றத்துக்காக சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ள எமது பங்களிப்பை வழங்குவோம்.

மக்கள் இறைமைக்கு மதிப்பளிக்கும் அதேநேரம், அவர்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்போம். எம் மீதான சந்தேகம் காரணமாக நிச்சயமற்ற நபர்கள் இருப்பதை நாம் அறிவோம். எனது செயற்பாடுகளின் ஊடாக உங்களின் நம்பிக்கையை வெல்ல எதிர்பார்க்கிறேன்.

உங்களுடைய விமர்சனங்களை பொறுத்தமான தருணத்தில் ஏற்றுக்கொள்வேன். அதேபோல் நாங்கள் கட்டியெழுப்ப போகும் எதிர்காலத்தின் பங்குதாரர்களாக உங்களை வலுவூட்டுவோம். எமக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை கலைய முடியுமானால்,நமக்கிடையிலான இலக்கு சமமானவை என நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

அதன் ஊடாக நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடியை ஏற்றுக் கொள்ளவும் அதன் ஊடாக முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான மூலோபாயங்களை இணைந்து திட்டமிடவும் முடியும்.

இந்த நாட்டை கட்டியெழுப்வுதற்காக காத்திரமாகவும் நேர்மையாகவும் இணையும் அனைவருக்கும் எமது கதவுகள் திறந்துள்ளன. மக்களின் ஆணைக்கு அமைவான பாராளுமன்றம் ஒன்று அவசியப்படுகிறது. இறுதியாக இருந்த பாராளுமன்றம் மக்கள் ஆணையை திரிபுபடுத்தியதாக காணப்பட்டது. அதனால் பாராளுமன்றத்தை கலைக்க நடவடிக்கை எடுத்தேன்.

அரசியலமைப்புக்கு அமைவாக நாட்டை கொண்டு செல்வதற்காக எமது பாராளுமன்ற பிரநிதித்துவத்திற்கு அமைவாக அமைச்சரவை ஒன்றை நியமித்தேன். அன்றாடம் சூரியன் உதிக்கும் ஒவ்வொரு பொழுதிலும் மக்கள் காணும் கனவுகள் உள்ளன.

அது இன்று இருப்பதை விடவும் சிறந்த நாடாகும். ஆனாலும், பல வருடங்களாக அது கனவாகவே போய்விட்டது என்பதையும் நானும் அறிவேன்.

சந்தர்ப்பவாதம், அதிகாரமோகம்,சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் உள்ளது vd;why;.

இருப்பினும், எமக்கு வரலாற்றில் நழுவவிட முடியாத சந்தர்ப்பமொன்று கிடைத்திருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவோம் என்றார்.

மயிலாடுதுறை

தமிழக எம்.பி. சுதா

# அனுரவுக்கு கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 37 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்கக் கோரி இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு மயிலாடுதுறை தொகுதி காங்கிரஸ் எம்.பி. சுதா கடிதம் எழுதியுள்ளார்.



இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் (எக்ஸ்) தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படும் சம்பவம் தொடர்பாக இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள அநுர குமார திசாநாயக்கவிற்கு கடிதம் எழுதியிருக்கிறேன்.

இந்தியா இலங்கைக்கு இடைப்பட்ட கடற்பகுதியில் இருநாட்டு மீனவர்களுக்கும் பாரம்பரிய மீன்பிடி உரிமை இருப்பதால், பரஸ்பர மரியாதையை நாம் கடைபிடிக்க வேண்டுமென்றும், கடந்த காலங்களில் இலங்கையை ஆண்டவர்கள் செய்த அதே தவறுகளை இலங்கையின் புதிய நம்பிக்கையாக பார்க்கப்படுகிற அநுர குமார திசாநாயக்க செய்ய வேண்டாமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறேன். இலங்கையில் புதிய அரசு அமைந்திருக்கும் சூழலில் இந்திய அரசு இராஜாங்க ரீதியிலான நடவடிக்கைகளை எடுத்து மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்” இவ்வாறு பதிவிட்டு அக்கடிதத்தை இணைத்துள்ளார்.

திருவனந்தபுரம்

மதுக்கடையில் பணம் கேட்டதால்

## மொத்த ஊரும் இருளில்

மதுக்கடையில் பணம் கேட்டதால் கொந்தளித்த மின் ஊழியர்கள், மொத்த ஊருக்கும் மின் தடை ஏற்படுத்திய சம்பவத்தில், மின் வாரியம் குறித்த 3 பேரையும் பணிநீக்கம் செய்து உத்தரவிட்டது.

கேரள மின்வாரிய ஊழியர்கள் 3 பேர், மதுபான கடையொன்றில், மது அருந்திவிட்டு பணம் தர மறுத்துள்ளனர்.

இது வாக்குவாதமாக மாறிய நிலையில், பழிவாங்கும் எண்ணத்தில், மின்வாரிய ஊழியர்கள் 11 கே.வி. மின் பீடரில் தடை ஏற்படுத்தியுள்ளனர்.

இதனால் அந்த பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது. விசாரித்தபோது தான், ஊழியர்கள் போதையில் இருப்பதும், காரணமே இல்லாமல் மின் தடை ஏற்படுத்தியதும் தெரியவந்தது.

இதையடுத்து பதவியை துஷ்பிரயோகம் செய்யும் வகையில், மின்வாரிய ஊழியர்கள் 3 பேர் செய்த சம்பவம் மின்சார வாரியம் தலைமை அலுவலக அதிகாரிகள் கவனத்திற்கு சென்றது. மதுக்கடை ஊழியர்களிடம் அதிகாரிகள் நடத்திய விசாரணையில், மின்வாரிய ஊழியர்கள் 3 பேர் மின்தடையை ஏற்படுத்தியது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, தலைமை அதிகாரியின் உத்தரவின் பேரில், குறித்த மின்வாரிய ஊழியர்கள் 3 பேரையும் நிர்வாக இயக்குநர் பணிநீக்கம் செய்து உத்தரவிட்டார்.

மேலும், இந்த சம்பவம் குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டதாக கேரள மாநில மின்சார வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுடெல்லி

## வாபஸ் வாங்கிய கங்கனா

வேளாண் சட்டங்கள் குறித்து தான் தெரிவித்த கருத்தை வாபஸ் பெறுவதாக பா.ஜ.க. எம்.பியும் பிரபல நடிகையுமான கங்கனா ரனாவத் அறிவித்துள்ளார்.



ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள மண்டி தொகுதி எம்.பி. கங்கனா ரனாவத். நடிகையான இவர் பா.ஜ.கவைச் சேர்ந்தவர். அவ்வப்போது ஏதேனும் கருத்துகளை கூறி சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

இந்நிலையில், செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பேசிய கங்கனா, “நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காக உள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். விவசாயிகள் நலன்களை கருதி, இரத்து செய்யப்பட்ட 3 வேளாண் சட்டங்களை மீண்டும் கொண்டு வரவேண்டும்” என்று கூறியிருந்தார்.

கங்கனாவின் பேச்சு, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு நல்வாய்ப்பாகிய நிலையில், இதுகுறித்த விமர்சனங்கள் எழ ஆரம்பித்தன.

இந்நிலையில், பா.ஜ.க. சார்பில் இது போன்று பேச கங்கனாவுக்கு அதிகாரம் இல்லை. அவரின் கருத்து கண்டிக்கத்தக்கது என்று பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் கௌரவ் பாட்டியா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தாம் பேசிய கருத்துகளை வாபஸ் வாங்குவதாக கங்கனா ரனாவத் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது, “எனது கருத்து யாருக்கேனும் வருத்தத்தை ஏற்படுத்தி இருந்தால் அதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். நான் கூறிய கருத்துகளை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்” என்று தெரிவித்தார்.

லிவர்பூல்

# வார்த்தை தவறிய பிரிட்டன் பிரதமர்



தங்கள் வசம் உள்ள இஸ்ரேல் நாட்டு பிணைக் கைதிகளை ஹமாஸ் உடனடியாக விடுவிக்க வேண்டும் என பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் வலியுறுத்தியுள்ளார். ஆனால், இதை அவர் சொன்னபோது வார்த்தை தவறி, ‘Retrun of Sausages’ என கூறி, பின்னர் அவரே அதை திருத்திச் சொன்னது இணையவெளியில் கவனம் பெற்றுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான மோதல் காரணமாக கடந்த ஒரு வருடமாக பலஸ்தீனம் யுத்தக் களமாக காட்சி அளிக்கிறது.

இந்நிலையில், மத்திய கிழக்கில் நிலவும் சூழல் குறித்து பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் பேசியுள்ளார். தனது கட்சியின் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற அவர், “காசாவில் போரை நிறுத்த வேண்டும். ஹமாஸ் வசம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும்” என்றார். அப்போது ஆங்கிலத்தில் Hostages என்பதற்கு பதிலாக Sausages (இது ஒருவகை இறைச்சி உணவு) என ஸ்டார்மெர் பேசினார். உடனடியாக வார்த்தை தவறியதை அறிந்து அதை மாற்றிக் கொண்டார் - அதுதான் இப்போது உலக அளவில் கவனம் பெற்று வருகிறது.

தொடர்ந்து பேசிய அவர் “பாதுகாப்பான இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் அவசியம். அதை இரு தரப்பும் உறுதி செய்ய வேண்டும். அதேபோல, லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையில் நிலவும் மோதல் போக்கினை அந்தந்த நாடுகள் கைவிட வேண்டும்” என தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# இலங்கையை வீழ்த்துமா நியூசிலாந்து?



இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது காலியில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கு இப்போட்டியின் முடிவானது இலங்கைக்கும், நியூசிலாந்துக்கும் முக்கியமானதாகக் காணப்படுகிறது.

இருக்கின்ற ஐந்து போட்டிகளில் நான்கு போட்டிகளில் இலங்கை வென்றால் இறுதிப் போட்டிக்கு இலங்கை தகுதி பெறுமென்ற நிலையில் பிரபாத் ஜெயசூரிய, அறிமுக சுழற்பந்துவீச்சாளர் நிஷான் பீரிஸ் ஆகியோர் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். இதில் ரமேஷ் மென்டிஸை பீரிஸ் பிரதியிட்ட நிலையில், ஓட்டங்களைக் கட்டுப்படுத்த வேண்டியவராக உள்ளார். இதேவேளை, இலங்கையணியில் கடந்த போட்டியில் விளையாடிய லஹிரு குமாரவையும் மிலான் ரத்னாயக்க பிரதியிட்டுள்ளார்.

இந்நிலையில், நியூசிலாந்து அணியில் மிற்செல் சான்ட்னெரை மிஷெல் பிறேஸ்வெல் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதுடன், அணித்தலைவர் டிம் சௌதியை மற் ஹென்றி பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

## சம்பியனானது கிண்ணியா றேஞ்ஜர்ஸ்

அஸ்ஹர் இப்றாஹிம்

கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனமும், கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த கால்பந்தாட்டத் தொடரில் றேஞ்ஜர்ஸ் கால்பந்தாட்ட அணி சம்பியனானது.

எளிலரங்கு விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் புளூ பேர்ட் கால்பந்தாட்ட அணியை வென்றே றேஞ்ஜர்ஸ் சம்பியனானது.





கல்முனை சாஹிரா தேசிய கல்லூரியின்

## ஸஹிரியன் பிறீமியர் லீக் தொடர்

அஸ்ஹர் இப்றாஹிம்

கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரியில் கல்வி பயின்ற பழைய மாணவர்களை கல்லூரியுடன் இணைக்கும் திட்டத்தின் அடிப்படையில் கல்லூரியின் 7ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள ஸஹிரியன் பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் மூன்றாவது பருவகாலத்துக்கான பங்குதாரர் கூட்டம் அண்மையில் கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் கூட்ட மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.




இதன்போது தொடர் அறிமுகம், போட்டி முறைமை போன்ற விடயங்கள் அணிகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கக் காட்சி மூலம் தெளிவுபடுத்தப்பட்டது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்ட விளையாட்டுப் போட்டியில்

## வாழைச்சேனை ஆயிஷா முதலிடம்

எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற சிறுவர் மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியில் வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் என். சஹாப்தீன் தெரிவித்தார்.





மகளிர் பிரிவில் கலந்து கொண்ட தரம் 3, 4இல் கல்வி கற்கும் மாணவிகள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி கோட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளனர்.

அதேபோன்று, ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவிகள் கோட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

தங்களது திறமைகளைப் வெளிப்படுத்தி வலய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக்கும் பயிற்றுவித்த விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான ஏ.எம்.அம்ஜத், எஸ்.ஐ.எம்.றிபாஸ் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கிய வகுப்பாசிரியர்கள், பெற்றோர் அனைவருக்கும் சஹாப்தீன் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 26 செப்டெம்பர் 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.